227

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி க. ரக்தாக்ஷி-ஸூ ஆவணி-மீ பகுதி அ

Vol. 1. August & September No.

'என்னீர்மை' யென்னும் திருவாய்மொழிப் பாசுரத்தில்

பட்டர் நிர்வாஹம்.

ஸமீபத்தில்வெளிவந்த வேதாந்ததீபிகை சம்புடம் 14, ஸஞ்சிகை 11-ல்; நம்மாழ்வாரின் வைபவமும் திருவாய்மொழியின் பெருமையும் என்னும் விஷயம் வெளிவந்திருப்பது யாவரும்அறிந்ததே. அதில் என்னீர்மை யென்னும் திருவாய்மொழிப் பாசுர ஸம்பந்தமான பட்டர்நிர்வாஹத்திலுள்ள விஷயம் ப்ரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அங்கே காட்டப்பட்ட தமிழ்ப்ப்ரமாணங்கள் சுத்தபாடமில்லாமையால், அதன் விஷயம் திருத்தமாகவும், விளக்கமாகவும் எழுதப்படவில்லையென்று தோன்றுகிறது.

திருவாய்மொழியீட்டின் அரும்பதாசார்யர்களும் அந்தத் தமிழ்ப்ரமாணங்களை அசுத்தபாடமாகவேகொண்டு தாத்பர்யமருளியிருக்கிறார்கள். ஆகையால் அந்த மேற்கோள்களின் சுத்தபாடத்தை விசாரித்து, ஸந்தர்ப்பத்தோடு பொருந்த அவற்றின் அர்த்தத்தையும் எழுதி வெளியிடுதல் இங்கே அவசியமான கார்யமாய் ஏற்பட்டது.

ஸ்ரீய:பதியான ஸர்வேசுவரனுடைய புருஷோத்தமத்வத்தாலே ஆழ்வார் தாம் பும்ஸ்த்வம் அழிந்து பெண்ணுடையுடுத்து, அவனோடுகலந்து பிரிந்தாளொருபிராட்டி தசையைஅடைந்தவராய், சில திர்யக்குகளிடத்தில் தன் ஆற்றாமையைச் சொல்லி எம்பெருமான்பக்கல் தூதுபோக்குவதை விஷயமாகக்கொண்டு, 'அஞ்சிறைய மடநாராய்' தொடக்கமாக அநேகம் பாசுரங்களை அருளிச்செய்திருக்கிறார். அவற்றுள் 'என்னீர்மை கண்டிரங்கி' என்பதும் ஒன்று. அப்பாசுரம் முழுவதும் வருமாறு:—

என்னீர்மைகண்டிரங்கிஇதுதகாதென்னாத
என்னீலமுகில்வண்ணர்க்கென்சொல்லியான்சொல்லுகேனோ
நன்னீர்மைஇனிஅவர்கண் தங்காதென்றொருவாய்ச்சொல்
நன்னீலமகன்றில்காள்நல்குதிரோநல்கீரோ.

நான் தம்மைப்பிரியில் ஒரு க்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டாத ஸ்வபாவை என்னுமிடத்தை அறிந்துவைத்து என் பக்கலிலே க்ருபை பண்ணி, 'இவள் நம்மைப் பிரிந்திருக்கைக் கிடல்லள்' என்று பாராதவர்க்கு நான் என்னவார்த்தையைச் சொல்லுவது என்று எம்பெருமானைச் சொன்னாளாய்ப் பின்னையும் அவனை விடமாட்டாமையாலே, 'அவளுடைய நல்லுயிரானது இனி அவள்பக்கல் ஒரு க்ஷணமாத்ரமும் தங்காது' என்று ஒருவார்த்தை சொல்லவேணுமென்று சில அன்றில்களை நோக்கிச்சொல்ல அவையும் போகாதிருந்த விடத்தில் இத்துணையும் சொல்ல வல்லீர்களோ மாட்டீர்களோ என்கிறாள்: என்பது அதன் பொழிப்புரையாகும்.

இனி, இப்பாசுரத்தின் ஈட்டில் என்னீர்மைகண்டிரங்கி என்பதன் வ்யாக்யானாவசரத்தில் ப்ராஸங்கிகமாக ஓர்ஐதிஹ்யம்; காட்டப்பட்டிருக்கிறது. அதுவே இங்கு பட்டர் நிர்வாஹம் என்று குறிக்கப்பட்டதாகும். அதாவது "பட்டரை ஒருதமிழன் 'கேட்டிரங்கி யென்னாதே கண்டிரங்கி யென்னப் பெறுமோ?' என்ன, 'அணைத்தகை நெகிழ்த்த அளவிலே வெளுத்தபடி கண்டால் பிரியத்தகாதென்றிருக்கவேண்டாவோ; இப்படிக் கூடுமோ என்னில், புல்லி யித்யாதி, காதலர் தொடுவுழியித்யாதி, உனக்கித்தமிழ்போகாதோ, என்றார்" என்பது.

இங்கே தமிழனுடைய ப்ரச்நத்தின் அர்த்தம் என்னவென்றால்;— நாயகனைப்பிரிந்து தூதுவிடுகிற ப்ரகரணத்தில் தலைவியினுடைய இடையாட்டத்தை விதேசஸ்தனான தலைவன் காணுமாறில்லை யாகையால், என்னீர்மை கேட்டிரங்கி என்றுசொல்லுவதே பொருத்தமுள்ளது என்பதாம். அதற்கு பட்டர் கூறிய சமாதானத்தின் பொருள் என்னவென்றால்;— முன்பு இருவரும் கூடியிருக்கச்செய்தே சிறிது பிரிந்த அளவில் தலைவியின் வைவர்ண்யத்தைத் தலைவன் கண்டிருக்கிறான் ஆகையால், அதையுத்தேசித்து என்னீர்மை கண்டிரங்கி என்னத்தட்டில்லை என்பது. அதற்காக இரண்டுதமிழ் மேற்கோள்களும் காட்டப்பட்டன. உனக்கித்தமிழ்

போகாதோ? என்றது, உனக்கு இத்தமிழ்வசனங்களில் ப்ரஜ்ஞை செல்லாதோ என்றபடி. அதாவது இவைகளை நீ அறியாயோ? என்றார் என்க. இவ்வழக்கை, கம்ப நாட்டாழ்வார் மனுநீதியை அறிந்த அரசன் என்று சொல்லவேண்டுமிடத்து "மனுநெறிபோன வேந்தன்" என்றுளடுத்தாளுவதனாலும் அறியலாம். அதுநிற்க:

அங்கே தமிழ்ப்ரமாணங்களாகக் காட்டப்பட்ட இரண்டும் லக்ஷ்யங்களே; வேதாந்த தீபிகையிற் கண்டபடி லக்ஷணங்களல்ல. அவற்றுள் முதலாவதான புல்லியித்யாதி யென்பதை இங்கே விசாரிப்போம்.

புல்லிக்கிடந்தேன்புடைபெயர்ந்தேன்அவ்வளவில்
அள்ளிக்கொள்வற்றேபசப்பு.

என்பது திருக்குறளில் 1187-ம் பாட்டாகும். நாயகனைப் பிரிந்தாளொரு நாயகி தன்னிடத்துண்டான வைவர்ண்யத்தால் வருந்த அப்பொழுது தோழி, 'நாயகன் பிரிந்திருந்தானாகிலும் மிகவும் சமீபத்திலே இருக்கிறான்; அங்ஙனமாகவும் நீ வருந்துத லொழிந்தாயில்லை' என்றுகூற, அதற்கு ப்ரத்யுத்தரமாகத் தலைவி கூறும் விஷயமே இக்குறட் கருத்தாயுள்ளது. 'முன் ஒருகாலத்தில்தலைவனும் யானுமாக ஸம்ச்லேஷித்திருந்த தசையில் அறியாமையாலே சிறிது அணைத்தகை நெகிழ்த்திருந்தேன்; அவ்வளவிலே பசப்பு அள்ளிக் கொள்வதுபோல வந்து செறிந்தது' என்று தலைவி தோழிக்குச் சொல்லுகிறாள். இங்கு, அறியாமையாலே சிறிது அணைத்தகை நெகிழ்த்திருந்தேன் என்றது, என்னையறியாமலே போகாதிசயத்தால் அவசமாக அணைத்தகைசிறிது நெகிழ்ந்தது என்றவாறு. அள்ளிக் கொள்வதுபோலச் செறிந்தது என்றது, அள்ளிக்கொள்வதற்கு யோக்யமான பொருளைப்போல அவ்வளவு மிகுதியாக மீதூர்ந்தது என்றபடி. அப்போது அணைத்தகை நெகிழ்த்த மாத்திரத்திற்கே அவ்வளவானால் இப்பிரிவின்கண் என்னைகுமென்பது சொல்லவேண்டுமோ என்பது அவளுடைய கருத்து. இனிஇவ்வாறன்றி, "அள்ளிக்கொண்டதே பயிர்ப்பு" என அரும்பத வ்யாக்யானங்களிற் காணப்படும் பாடம் பொருத்தமில்லாத தாகும். பயிர்ப்பென்னும் சொல் வைவர்ண்யத்தை உணர்த்துவதாகவும் ...... தெரியவில்லை.

அஃதுநிற்க: இரண்டாவது மேற்கோளான காதலர்தொடுவுழி யித்யாதியென்பதை இனி ஆராய்வோம். அது குறுந்தொகை என்னும் சங்கநூலில் 399-வதான ஒருபாட்டின் குறிப்பாகும். அப்பாட்டு முழுவதும் வருமாறு:—

ஊருண்கேணிஉண்டுறைத்தொக்க
பாசியற்றேபசலைகாதலர்
தொடுவுழித்தொடுவுழிநீங்கி
விடுவுழிவிடுவுழிப்பரத்தலானே.

இது சங்கப்புலவருள் ஒருவரான பரணர்வாக்காக அறியப்படுகிறது. தலைமகன் வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியவிஷயம் இதில் அடங்கியுள்ளது: தலைவியோடு களவுப்புணர்ச்சியால் கலந்த தலைமகன், சிலநிமித்தங்களை முன்னிட்டு அவளைக் கற்புமுறையில் விவாஹம் செய்து வரைந்துகொள்வதற்குக் காலந்தாழ்த்த நிலையிலே, தலைவியின் மேனியெங்கும் வைவர்ண்ய மடைந்ததுகண்டு, 'நாயக ஸம்ச்லேஷம் நடையாடா நிற்கச்செய்தேயும் உனக்கு இப்பசலை பூப்பானென்' என்று தோழி கேட்க, தலைவி அதற்கு மறுமொழியாக இவ்வார்த்தையைச் சொல்லுகிறாள்; என்னுமிவ்வளவும் இப்பாட்டிற்கு அவதாரிகையாக அமையத் தக்கது.

நாயகர் தொட்ட தொட்ட இடங்களில் விலகி விட்ட விட்ட இடங்களில் வ்யாபித்தலால், வைவர்ண்யமானது ஓர் ஊருணியின் கண்ணே நீருண்ணும் துறையிற் கூடிய பாசியைப் போன்றது; என்பது அதன்பொருளாகும். அதாவது தொட்ட இடத்தில்மட்டும் சிறிது விலகி விட்ட விட்ட இடமெல்லாம் வ்யாபித்திருக்கும் பொய்கைப் பாசியே போல நாயகர் தொட்ட தொட்ட இடத்தில் நீங்கி விட்ட விட்ட இடமெல்லாம் தன் உடம்பிற் பசலையும் பரந்தது என்று தலைவி தன் ஆற்றாமையை மிகுத்துச் சொல்லியபடி. பசலையும் பாசியும் நிறத்திலன்றிச் செய்கையினாலும் ஒக்கும் என்பதாம். தலைவனோடு இடைவிடாது முயங்கி யிருத்தற் பொருட்டுத் தலைவி வரைதலை வேண்டினாள் என்பது இதன் குறிப்பு. அதனால் தோழி தலைவனுக்கு அறிவித்துஅவ்வரைதலைச் செய்விக்க வேண்டுமென்பது அவள்கருத்து. காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கி விடுவுழி விடுவுழிப்பரத்தலான், பசலை ஊருண்கேணி உண்துறை தொக்க பாசி அற்று; என்று இப்பாட்டிற்கு அந்வயம் கண்டு கொள்வது.

இஃதிவ்வாறிருக்க அரும்பதவ்யாக்யானங்களில் "காதலர் தொடுவுழி தொடுவுழி நீங்கி விடுவுழிவிடுவுழி பயத்தலானேன்" என்று காணப்படும் பாடமும் அதற்கநுகுணமான உரையும் அநுபபந்நங்களாகும். அன்றியும் 'சங்கத்தார்குறள்' என்னும் பெயர் இக்குறுந்தொகையைக்குறித்து வழங்குவதன்றென்பதும் இங்கே குறிக்கத்தக்கது. அஞ்சிறைய மடநாராய் ப்ரவேசத்திலும் அடையவளைந்தான் அரும்பதத்தில் இந்த மேற்கோள்கள் இரண்டும் எடுத்தாளப்பகின்றன. அவ்விடத்திலும் சுத்தபாடமில்லை.

ஆகவே இதுவரையிலும் சொல்லிய விஷயங்களால், நாயக ஸந்நிதியிலேயும் தலைவிக்குப் பசப்புறுதல் முதலான துன்பங்கள் சம்பவிக்குமென்பதும், பட்டர் நிர்வாஹத்திலே கண்ட இரண்டு தமிழ்ப்ரமாணங்களும் 'என்னீர்மை கண்டிரங்கி' என்று அருளிச்செய்த ஆழ்வாருடைய திருவுள்ளக் கருத்திற்கிணங்க அமைந்துள்ளனவென்பதும் ஒருவாறு விளக்கப்பட்டன. இதே அபிப்பிராயமுடைய மேற்கோள்கள் தமிழிலக்கியங்களிலே இன்னும் பல காணலாம். ஆனாலும் அவைகளை இங்கே எழுதுவதனால் மிகவும் விரியுமென்று இம்மட்டோடு நிறுத்தப்பட்டது.

T. N. அப்பனையங்கார்,

இராமேசுவரம் தேவஸ்தானம் ஸம்ஸ்க்ருத வித்யாசாலை,

மதுரை.

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

(168-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு, ஆசார்ய ஸமாச்ரயணமென்று கீழ்ச்சொல்லிப் போந்தமையால், ஆசார்ய ஸ்வரூபம் ப்ரஸங்காத் நிரூபிக்கப்படுகிறது. ஆசார்யனென்பது ப்ருஹ்ம வித்யையை உபதேசிக்குமவனே. மற்ற வித்யைகளை உபதேசிக்குமவனுக்கு ஆசார்யத்வ பூர்த்தியில்லை; அவனை ஆசார்யனென்று வ்யவஹரிப்பது ஔபசாரிகம்.

ஆசார்யனாவான் ஸத்ஸந்தான ப்ரஸூதனாய், ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அறிந்தும், அநுஷ்டித்தும், அப்படியே பிறர்களை

அறிவித்தும், அநுஷ்டிப்பித்தும் போருமவனாய், பரமஸத்வைக நிஷ்டனாய், க்யாதி, லாப, பூஜைகளில் அபேக்ஷையில்லாதவனாய், பரமக்ருபாளுவாயிருக்குமவன்.

இந்தஆசார்யன் குலக்ரமாகதனென்றும், ப்ரத்யக்ரனென்றும் இரண்டு வகையாயிருக்கும். அதில் குலக்ரமாகதன், தான்வம்ச பரம்பரையாக ஆசார்யபதத்தை நடத்திப்போருமவன். ப்ரத்யக்ரனானவன் - தான் ஸகல சாஸ்த்திரார்த்தங்களையும் அறிந்தும், அநுஷ்டித்தும் போருமவனாய் ஜ்ஞாநாபேக்ஷையுள்ளவர்களுக்கு ஜ்ஞானப்ரதானம் பண்ணுமவனாய் பாரம்பர்யத்தால் வந்ததான ஆசார்யத்வமில்லாமல் நவீநனாயிருக்குமவன்.

இவர்களுள் குலக்ரமாகதனான ஆசார்யன் முக்யன். இப்படி குலக்கிரமாகதனான ஆசார்யனை தானும்வம்ச பரம்பரையாக ஆச்ரயிக்குமொருவன், அந்தஆசார்யனுக்கு பாதித்யாவஹமான தோஷமில்லாதிருக்கும் பக்ஷத்தில் மற்றொருஆசார்யனை, அந்தஆசார்யனுடைய நியமனமில்லாமல் ஆச்ரயித்தானாகில், குலக்ரமாகதரான ஆசார்யராயுள்ள வஸிஷ்டரையும் தத்புத்ரர்களையும் நிராகரித்து விசுவாமித்திரரை ஆசிரயித்த த்ரிசங்குவின் படியாம். இந்த அர்த்தம் பாஞ்சராத்ரத்தில் பரமபுருஷஸம்ஹிதையில் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. அந்த சுலோகங்களும் இங்கே விவரிக்கப்படுகின்றன.

பாஞ்ச ராத்ரம் பரம புருஷ ஸம்ஹிதை.

அதவக்ஷ்யே மஹாசார்ய சப்தார்த்தம் ச்ருணுபத்மஜ
தஸ்ய ச்ரவண மாத்ரேண முக்தோ பவதி மாநவ:!!
ஆசிநோதிஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி
ஸ்வய மாசரதேயஸ்மாத்தஸ்மாதாசார்ய உச்யதே!!
ஆசார்யோத் வித: ப்ரோக்த: ஸர்வ சாஸ்த்ரார்த்த வேதிபி:
குலக்ரமாகத: பூர்வ: ப்ரத்யக்ர: சததாபர:
குலக்ரமாகதாசார்யம் தமாசார்ய விதோவிது:
பும்ஸ:பாகதி ஜ்ஞாநே ஜிஜ்ஞாஸா ஜாயதெ யதா!!
தத்பூர்வ தேசிகா பாவாத் யஸ் ஸமித்பாணி ராச்ரயேத்
ததாநீ மஸ்ய தயயா தீக்ஷா ஸம்ஸ்கார பூர்வகம்
மந்த்ர வ்யாக்யா க்ருதாசார்ய: ஸப்ரத்ய க்ராக்ய உச்யதே
குலாசார்யஸ்ய பஜநம் யேவாஸ ‑ க்ருதிநோ ஜநா:!!
குர்வந்தி ஸததம் பக்த்யா தேவந்த்யா: ஸர்வ தேவதை:
ஸர்வக்ருது சதம் க்ருத்வா யத்பலம் ஸமவாப்நுயாத்!!
தத்பலம் ஸமவாப்நோதி குலாசார்யஸ்ய பூஜநாத்!!

தைவாத் தேசாந்தர கதே லுப்தேவா குலதேசிகே
ததீய புத்ர ப்ராத்ராதே: உபதேசோபி க்ருஹ்யதாம்!!
தத்புத்ராதே ரபாவேது சிஷ்ய:சேத் தத்வ லோலுப:
தத்துல்ய பாவம் ஸர்வஜ்ஞம் ஆசார்யாந்தர மாச்ரயேத்!!
தேநோபதிஷ்டஸ் ஸர்வஜ்ஞ: சிஷ்ய: ஸத்கதி மாப்நுயாத்!!
தமேவ குரும் அஸ்யாபி புத்ராத்யா: பூஜயந்த்யத:!!
தைவாதீநாத் குலாசார்ய தத்புத்ராதௌ ததா கதே!
உபதேசோ க்ருஹீதவ்ய: புந: குலகுரோர் மநோ:!!
குலக்ர மாகதாசார்ய ஸந்நிதௌ அந்யதேசிக:!
அநுமத்யா விநாதஸ்ய ஸம்பூஜ்யோ நகதாசந!!
குலாசார்யா நிதேசேந தத்ரைவ தேசிகாந்தரம்!
தத்துல்ய பக்திர் பஜதே ஸவை நரக பாஜநம்!!
பஹுநாத்ர கிமுக்தேந ப்ருஹ்மந் ஸம்க்ஷேபத: ச்ருணு
நயஜ்ஞைர் நதபோபிர்வா நதீர்த்தைர் வ்ருத கோடிபி:
நாந்ய ருபாயைர் விவிதைர் மந்த்ரேளஷத புரஸ்ஸரை:!
குலக்ர மாகதாசார்ய திரஸ்கார ஜபாதகாத்
முச்யதே மநுஜோ மூட: ஸர்வ துஷ்க்ருத பாஜநம்!
தஸ்மாத் ஸர்வாத்மநா ப்ருஹ்மந் குலாசார்யம் ப்ரபூஜயேத்
கர்மணும நஸாவாசா நிர்தேஷ: சுத்திமாப்நுயாத்!!

இந்த சுலோகங்களின் தாத்பரியமெல்லாம்கீழேசொல்லப்பட்டன.

இனி குலக்ரமாகதனுன ஆசார்யன் முக்யன் என்பதற்கு உபபத்தி சொல்லப்படும். குலக்ரமாகதனுன ஆசார்யனுக்கு, தனக்கு முந்தின வாசார்யர்களுடைய, ஈசுவரனுக்கு அத்யந்தாபிமதமான திருமேனியினுடைய ஸம்பந்தமும், ஜ்ஞான ஸம்பந்தமும் இருப்பதால் தத்ஸம்பந்தம் உத்கிருஷ்டம். இதைத் திருவுள்ளம்பற்றியே ஸ்ரீபாஷ்யகாரர் எழுபத்துநாலு ஸிஹ்மாஸநாதிபதிகளை நியமித்தருளி தத்வம்ச்யர்களே பஞ்சஸம்ஸ்காரம் முதலான வ்யாபாரங்களுக்கு அர்ஹர்களென்றும் மற்றவர்கள் அவர்கள் நியமனத்தாலே கீழ்க்குறிக்கப்பட்ட பஞ்சஸம்ஸ்காராதிகளைப் பண்ணக் கடவரென்றும் வ்யவஸ்தை பண்ணியிருக்கிறுர். இந்தஸம்ப்ரதாயமே நம்முடைய ஸித்தாந்தத்தில் இப்போது நடந்து வருகிறது.

இந்த ஆசார்யன், கேவல மந்த்ரோபதேஷ்டாவென்றும், மந்த்ரார்த்தோப தேஷ்டாவென்றும் இரண்டுவகையா யிருப்பன். அதில் மந்த்ரோபதேஷ்டாவே மந்த்ரார்த்தையும் உபதேசிக்கக் கடவன். அப்படி அவனுபதேசிப்பது சௌகர்யப்படாதிருந்தால் அவனுடையநியமனத்தாலே மற்ற ஆசார்யவம்ச்யனிடத்திலாவது,

கீழ்ச்சொன்ன ப்ரத்யக்ஷாசார்யனிடத்திலாவது அர்த்தக்ரஹணம் பண்ணிக்கொள்ளலாம். இந்தவிஷயம் ஸ்ரீபாஷ்யகாரர் ஐந்து ஆசார்யர்களிடத்தில் விசேஷார்த்தக்ரஹணம் பண்ணியிருப்பதாலும், நடாதூர் அம்மாள் தனக்கு பிதாவாயும் ஆசார்யனுயுமுள்ள நடாதூராழ்வானுடைய நியமனத்தாலே எங்களாழ்வானிடத்தில்ஸ்ரீபாஷ்யார்த்தக்ரஹணம் பண்ணினபடியாலேயும் ஸ்பஷ்டம். இப்படியே வித்யா வம்சியரும் முக்யர்கள். இந்தவிஷயத்தை, "நாஸ்ய பரபுருஷா க்ஷீயந்தே" என்று சுருதிசொல்லிற்று.

இதில் ஓராண் வழியாவது, ஒரு ஆசார்யனுக்கு அநேக சிஷ்யர் களிருந்தபோதிலும், அவருள் ஒருவரேஓராண்வழிக்கிரமத்தை அநுஸரித்திருப்பர். அதாவது நாதமுனிகளுக்கு அநேகசிஷ்யர்களிருக்கச் செய்தேயும் அவருள் உய்யக்கொண்டாரும், அப்படியே ஆளவந்தாருக்குப் பெரிய நம்பியும், பாஷ்யகாரருக்கு எம்பாரும் அப்படியே மணவாளமாமுனிகள் பர்யந்தம் இந்தக்ரமமானது ஏற்பட்டிருக்கிறது.

மற்ற ஆசார்யவம்சியர்களுக்கும் ஓராண்வழியாய் வந்தஆசார்யர்களுக்கும் வாசி என்னென்னில், ஓராண்வழியாய் வந்த ஆசார்யர்கள், ஜ்ஞாநாதிகனுய் ஆசார்யவம்சிய மன்றியிருக்கு மவனுக்கும் நவீனமாக ஆசார்யபதத்தைக் கொடுக்கத்தகுந்தவர்கள். மற்றை ஆசார்யவம்சியர்களுக்கு அந்த அதிகாரமில்லை.

இந்தவிஷயம் நஞ்சீயர்,நம்பிள்ளை இவர்களிடத்தில் காணலாம். அப்படியிருக்கையாலேஆசார்யவம்சத்திலவதரித்தவர்களும்ஓராண் வழி ஆசார்யர்களை ஆசிரயித்து மற்றவர்களுக்கு ஆசார்யபதத்தைக் கொடுத்திருக்கிருர்கள். இதற்கு உதாஹரணம், மணவாளமாமுனிகள், எழுபத்துநாலு ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவரான கோமடத்தாழ்வான் வம்சியராயிருந்தபோதிலும் திருவாய்மொழிப் பிள்ளை திருவடிகளில் ஆசிரயித்தார். அப்படி ஓராண்வழியிலே அந்வயித்தவரானபடியாலே மணவாளமாமுனிகள் வானமாமலை ராமாநுஜஜீயர்க்கு ஓராண் வழிக்ரமத்தை ஸாதித்தார். ஆதலால் வானமாமலை ராமாநுஜஜீயரும் ஓராண்வழிஸம்ப்ரதாயத்தைஅநுஸரித்து மற்றவர்களுக்கு ஆசார்ய பதப்ரதானம் பண்ணியிருக்கிருர். அங்ஙனமன்றிக்கே ஓராண் வழிக்ரமத்தில் கோயில் கந்தாடை அண்ணனும் அந்வயித்தவரென்று சில ஆசார்யர்களுடைய அபிப்ராயம்; யதாஸம்ப்ரதாயம் கண்டுகொள்வது.

கேவலமந்த்ரோபதேஷ்டாவும், அர்த்தோப தேஷ்டாவும் கௌரவ்யதையிலே துல்யர்கள் (க) "அஸாவஸாவித்யாபகவத்த:" என்றும் "லக்ஷ்மீநாதஸமாரம்பாம்" என்றும், ஸ்வாசார்யன் முதலாக எம்பெருமான் பர்யந்தமும், எம்பெருமான் முதலாக ஸ்வாசார்ய பர்யந்தமும் அநுஸந்திக்கப்படுகிற குருபரம்பரையில் இருவரும் அநுஸந்தேயர்; இதற்கு ப்ரமாணம்

(உ) "மந்த்ரேதத் தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌத்ரிஷூபக்திஸ்ஸதாகார்யா ஸாஹி ப்ரதமஸாதநம்" (ங) "ஸஹிவித்யாதஸ்தம் ஜநயதி தச்ரேஷ்டம் ஜந்ம சரீயாந் ப்ருஹ்மத: பிதா" இத்யாதி வசனங்களாம்.

இந்தஆசார்யன், க்ருபாமாத்ரப்ரஸந்நனென்றும், அநுவ்ருத்திப்ரஸன்னனென்றும், இரண்டுவகையாயிருக்கும். அதில் க்ருபாமாத்ரப்ரஸன்னாசார்யராவார், சேதனனுடைய துர்க்கதியைக்கண்டு பொறுக்கமாட்டாமல் கேவலக்ருபையாலே, விமுகரான சேதனருக்கும் ஜ்ஞானோபதேசம் பண்ணுமவர்மள்; பிராட்டியும், ஆழ்வாரும்போல்வார். இந்த அர்த்தம் (ச) "தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும்" என்கிற ஆசார்யஹ்ருதய சூர்ணிகையில் வ்யக்தம். தன்னுடைய அநுவ்ருத்தியினுலே கிருபையுண்டாகி ஜ்ஞானோபதேசம் பண்ணுபவர்கள் அநுவ்ருத்திப்ரஸந்நாசார்யர்கள். இவர்களில் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யர்கள் ச்ரேஷ்டர்கள்.

(க) இ-ள் இந்தவாசார்யன் இந்தவாசார்யன் என்று ஈசுவரன் பர்யந்தம் குருபரம்பரை அநுஸந்தேயம். பிராட்டிக்கு வல்லபனுன ஈசுவரன் முதலாகவும், நாதமுனிகள், ஆளவந்தார் இவர்கள் நடுவாகவும், கொண்டு ஸ்வாசார்யனளவும் குருபரம்பரை அநுஸந்திக்கத்தகும். எ-று

(உ) இ-ள் மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்கு உள்ளீடானவஸ்துவிலும், மந்த்ரப்ரதனுனவாசார்யன் பக்கலிலும், எப்போதும் பக்திபண்ணவேண்டும்; இதுவே முக்கியமான சாதனமாகும். எ-று

(ங) இ-ள் அந்த ஆசார்யன் அந்த ஶிஷ்யனுக்கு வித்யாஜந்மத்தைப் பிறப்பிக்கிறுன். அதுவே உத்க்ருஷ்டமான ஜன்மா. சரீரத்தையுண்டு பண்ணின பிதாவைக்காட்டிலும் ஜ்ஞானஜந்மத்தை யுண்டாக்கிய பிதாவே சிறந்தவன். எ-று

(ச) இ-ள் இப்படி சேதனனுடைய துர்க்கதியைக்கண்டு பொறுக்கமாட்டாமல் அவர்களுக்கு ஹிதோபதேசம் பண்ணுகைக்கு ஹேதுவான க்ருபை ஸர்வலோகமாதாவான பிராட்டிக்கும், மகனுன ப்ரஹ்லாதாழ்வானுக்கும், ஆழ்வாருக்கும், ஆழ்வாருடைய திருவடிகளை ஆசிரயித்து உஜ்ஜீவித்தவரான உடையவர்க்குமேயுள்ளது. எ-று

ஆசார்யன் ஸத்ஸந்தாநப்ரஸூதனுய் ஆஸப்த பூருஷம்சுத்தனுயிருக்க வேணுமென்று பாரத்வாஜஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறபடியால் அப்படிப்பட்ட ப்ராஹ்மணனே ஆசார்யபதத்துக்குரியவன். ஆனுல்ப்ரபத்தியில் எல்லோருக்கும் அதிகாரமிருப்பதாலும், ஜ்ஞானியாயிருக்கிறவன் விஷயத்தில் வர்ணுச்ரமாதி நியமம் முக்கியமில்லையென்றிருப்பதாலும் மற்றவர்ணத்தாரும் ஜ்ஞானேபதேசம்பண்ணலாமோ வென்னில்? அதுகூடாது. பாரத்வாஜஸம்ஹிதையில் கீழ்ச்சொன்ன ப்ராஹ்மணனே ஆசார்யபதத்துக்கு உரியவனென்று சொல்லிவிட்டு, மற்றவர்ணத்தார் அதற்கு அநர்ஹர் என்றும் நிரூபித்துவிட்டு, "கிமப்யத்ராபி ஜாயந்தே" என்கிறச்லோகத்தால், பகவத் ஸாக்ஷாத்காரம் வந்தவர்களிடத்தில்குல முதலானவற்றைச் சிந்திக்கலாகாதென்றும், அவர்களே ஆசார்ய பதத்துக்கு உரியவர்களென்றும் சொல்லியிருப்பதால் அவர்களைத் தவிரமற்ற ஆஸப்தபுருஷம் ஸூத்தரல்லாதார் ஆசார்யபதத்துக்கு உரியரல்லர். அப்படிஸாக்ஷாத்காரம் வந்தவர்களும் லோகக்ஷோபம் பிறக்குமென்று ஸர்வஸாதாரணமாக உபதேசித்தார்களில்லை. இந்த விஷயம் நம்மாழ்வாரிடத்திலும் திருமழிசைப் பிரானிடத்திலும் கண்டுகொள்வது.

இப்படியே "விதுரஸ்ஸ மகாமதி:" என்று ஜ்ஞாதிகராகச் சொல்லப்பட்ட விதுரரும், (உத்யோகபர்வத்தில், விதுரப்ரஜாகரத்தில்) "சூத்ரயோநா வஹம்ஜாத: நாதோந்யத் வக்துமுத்ஸஹே" என்றுத்ருதராஷ்டரனைக் குறித்து தான் ப்ருஹ்மவித்யோபதேசம் பண்ணினுல் மற்றசாமான்ய சூத்ரர்களும் அப்படியே செய்வார்களாதலால் லோகக்ஷோபம் பிறக்குமென்று தான் பருஹ்மவித்யோபதேசம் பண்ணலாகாதென்று சொல்லியிருக்கிறுர்.

எப்படிப்பட்ட ஜ்ஞாநாதிகர்களும் லோகஸங்க்ரஹார்த்தமாகத்தங்கள்தங்களுடைய வர்ணுச்ரமதர்மங்களை அதிக்ரமித்தார்களில்லை யென்பது ஸ்பஷ்டம். ஆழ்வாருக்குப் பின்பு இதுவரையிலுள்ள ஆசார்யபரம்பரையில் ப்ராஹ்மணரைத்தவிர மற்றவர்ணத்தவர்கள் ஆசார்யபதத்தை அவலம்பித்தார்களில்லை. நேரில் தேவப்பெருமாளுடன் ஸல்லாபம் பண்ணிக்கொண்டுவந்த திருக்கச்சிநம்பியைவிட்டு, ஸ்ரீபாஷ்யகாரர் பெரியநம்பியை ஆசிரயித்தபடியாலும் அந்த அர்த்தம் ஸூஸ்பஷ்டம்.

ஆதலால் அவரவர்ணத்தார் ஜ்ஞாநாதிகராயிருந்தாலும் "தஸ்மைதேயம் ததோ க்ராஹ்யம்" என்கிறப்ரமாணத்தின்படி கேவலம் விசேஷார்த் களை உபதேசிக்கமட்டும் அர்ஹராவதல்லது பஞ்ச ஸம்ஸ்கார பூர்வகமாக மந்த்ரோபதேசம் பண்ணலாகாது. அப்படி யோக்யதையுள்ளவர்கள் பகவத்ஸாக்ஷாத்காரம் வந்த ஆழ்வார்கள் போல்வார்கள். அவர்களும் லோகஸங்க்ரஹத்தின் பொருட்டு ஸர்வஸாதாரணமாகச் செய்யவில்லை. இவற்ருல், ப்ரஸக்தமாய் வந்த ஸதாசார்யஸமாச்ரயண க்ரமமிருக்கும்படி கண்டுகொள்ளத்தக்கது.

இனிமுக்தராவார்கீழ்ச்சொன்னப்ரகாரம் உபாயங்களை அநுஷ்டித்து அத்தால் ப்ரஸந்நனை ஈசுவரனுடைய அநுக்ரஹத்தாலே ஸம்ஸாரபந்தம் அற்றவர்கள். இவர்கள், கேவலர்களென்றும், பகவதநுபவபரர்களென்றும் இரண்டுவகையாயிருப்பார்கள். இப்படி இரண்டுவகையாயிருப்பதற்கு, "தத்யதித்தம்விது:" இத்யாதி சுருதியும்,(1)ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீஜ்ஞாநீச பரதர்ஷப" என்கிறகீதாவாக்யமும்,(2)"அப்ரதீ காலம்பநாந்யதீதி பாதராயண:" என்கிறஸூத்ரமும் ப்ரமாணங்களாம். இதனுடைய அவாந்தரப்ரகாரங்கள் புருஷார்த்த நிரூபணத்திற் சொல்லப்படும்.

இனி நித்யராவார் ஒருநாளும் ப்ரக்ருதிஸம்பந்தமில்லாதவராயும், பகவதநுபவகைங்கர்யங்களே தாரக போஷக போக்யங்களாகக் கொள்ளுமவர்களாயுமுள்ள நித்யவிபூதிவாஸிகளான அனந்த கருட விஷ்வக்ஸேநாதிகள். இந்தவிஷயத்துக்கு (3)"ரிஷய: ப்ரதமஜாயே புராண:" "(4)யத்ர பூர்வே ஸாத்யாஸ், ஸந்திதேவா:"

(1) இ-ள் ப்ருஷ்டைசுவர்யகாமன், அபூர்வமாக ஐசுவரியத்தை யபேக்ஷிக்கிறவன், ப்ரக்ருதியைவிட்டுப் பிரிந்த ஆத்மஸ்வரூபத்தையடைய விரும்புமவன், ஈசுவரனையடையவிரும்பும் ஜ்ஞாநி, இவர்கள் நால்வரும் என்னையுபாஸிக்கிருர்கள் எ-று

(2) இ-ள் ப்ரதீகாலம்பனங்களைக் காட்டிலும் வேறுபட்டிருக்கிற ப்ருஹ்மாத்மகமானஸ்வாத்மாவை உபாஸிக்கிறவர்களையும் அர்ச்சிராதிகதியாலேசேர்ப்பிக்கிருனென்று வியாசர் சொல்லுகிருர் என்பதாம்.

(3) யாதொரு பரமபதத்தில் எல்லாவற்றையும் ஸாக்ஷாத்கரித்தவர்களாய் எப்போதுமுள்ளவர்களாயிருக்கச்செய்தேயும் நூதன வயஸ்கர்களாயிருக்கிறவர்கள். என்பதாம்.

(4) யாதொரு பரமபதத்தில் எப்போதுமுள்ளவர்களாயிருக்கிறநித்யஸூரிகளிருக்கிருர்களோ? என்பதாம்.

(5) "ஸதாபசியந்திஸூரய:" என்கிற சுருதிகளும், பாஞ்சராத்ராதிகளும் ப்ரமாணங்களாம்.

(தொடரும்)

ஸ்ரீ உபய வேதாந்த வித்வான்
சிங்காராசார்யர்; காரப்பங்காடு

ஸ்யமந்தகமணி விருத்தாந்தம்.

(136-ம் பக்கத்தொடர்ச்சி.)

அவ்வாறு கடந்தும் சேய்மையனுய் ஓடுவதைக்கண்டு தமது சக்கரப்படையைப் பிரயோகித்தார். அது அதிக வேகமாய்ச் சென்று அவன் தலையைக்கொய்தது. பின்னர் அவனருகிற்சென்று அவனுடம்பையும் உடைகளையும் நன்கு பரிசோதித்தும் ஸ்யமந்தகமணியைக் காணப்பெருததினுல், உடனே திரும்பிவந்து அண்ணு! வீணுய்ச் சததன்வாவைக் கொன்ருேம் அவனிடத்திலே ஸ்யமந்தகமணியைக் காணேம் என்ருர்.

அதுகேட்ட பலராமர் வெகுண்ட மனத்தினராய் அடே! கிருஷ்ணு! உன் திருட்டுத்தனத்தை என்னிடத்திலுங் காட்டி விட்டாயே ஸ்யமந்தகமணி எனக்கு வேண்டுமென்ருல் விரும்பியபடி எடுத்துக்கொள்ளச் சம்மதிப்பேனே அங்ஙனமிருக்க அதற்காக அடாப்பொய் கூறினுய் சீசீ என்முன்னிலையில் நில்லாதொழிவாய், இனி உன்னுேடு சேர்வதில்லை உன்ருலேனும் ஏனையஉறவினர்களாலேனும் எனக்காகத் தக்ககாரியமொன்றுமில்லை என்ருர். அதைக் கேட்ட கண்ணபிரான் கவலையுற்று பலராமரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அண்ணு! என்னைத்தேவரீர் இங்ஙனம்கருதற்க; ஸ்யமந்தகமணியை யான் கவரவில்லை. இதுவிஷயம் பின்னர் நன்ருய் விளங்கும். ஆதலால், முனிவகற்றி என்மீது கருணைகொண்டெழுந்தருள்வேண்டுமெனப் பிரார்த்தித்தார். அதற்குப்பலராமர் உடன்படாதவராய் நீ இருக்கும் துவாரகாபுரிக்கும் யான் வரமாட்டேனெனச் சினந்து மிதுலா நகரஞ்சார்ந்தனர்.

அம்மிதுலா நகரைச் செங்கோலோச்சும் ஜனகமஹாராஜன், பலராமர்வருகிற சங்கதியைக் கேள்வியுற்று எதிர்சென்றழைத்துத்

---

(5) இ-ள் நித்ய ஸூரிகள்எப்போதும் ஈசுவரனைஸாக்ஷாத்கரித்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதாம்.

தம்மாளிகைக்கு வரவேண்டு மெனப் பிரார்த்தித்தார். அவரு மிசைந்து எழுந்தருளச் சோட-சோபசாரஞ் செய்தார். பின்னர் பலராமர் அங்கே தம்வாணுளைக் கழித்துக் கொண்டிருந்தார். அஞ் ஞான்று துரியோதனன் பலராமரிடஞ்சென்று எனக்குக் கதாயுத்த முறையைப் பயிற்றுவிக்க வேண்டுமென வேண்ட அதற்குடன் பட்டுக்கதாயுத்தப் பயிற்சியை அவனுக்குப்பயிற்றுவித்துக் கொண் டிருந்தனர். கண்ணபிரானும் துவாரகைக் கெழுந்தருளினர்.

பலராமரும் மூன்று வருஷகாலம் மிதுலாநகரத்திலே தம்வா ணுளைக் கழித்தனர். பின்னர் பப்புரு உக்கிரசேனன் முதலான யா தவர்கள் ஸ்யமந்தகமணியைக் கிருஷ்ணன் கவரவில்லையென்றவிஷ யம்ஜயமறத்தெளிந்தவர்களாய்ப் பலராமரிருக்கிறமிதுலாநகரமடை ந்துகிருஷ்ணன் ஸ்யமந்தகமணியை அபகரிக்கவில்லையென்றவிஷயம் அவர்மனத்திற் றெள்ளிதிற்புலனும் வண்ணம் தக்க சான்றெடுத் தோதி துவாரகைக்கு வரவேண்டுமெனப் பிரார்த்தித்தனர். அவ ரும் அங்ஙனமே இசைந்து துவாரகைக்கு வந்துசேர்ந்தார்.

தசரதன் பரசுராமருக்குப் பயந்து வருஷத்திற்கொரு பெண் ணை மணந்து யாண்டும் கங்கணக்கையையுடைய மணமகனுயிருந் ததுபோல் ஸ்யமந்தகமணியால் கண்ணபிரான் முதலானவர்களால் துன்பம் நேர்ந்தாலும் நேருமெனக்கருதிய அக்குரூரர், பிறர் தம் மோடு போர்செய்யாதிருப்பதற்காக யாகதீக்ஷையை மேற்கொண்டு மகத்தான யாகஞ்செய்யத்தொடங்கி இரவலர் பலர்க்கும் அவர்கள் விரும்பியபடியெல்லாம் வழங்கலாயினர்.

இந்தமகிமையால் அறுபத்திரண்டியாண்டு காலம் துவாரகா வாசிகள், பஞ்சம், வியாதி, பைசாசம் முதலியவற்றல் நேருகிற துன்பம் உண்டாகாது க்ஷேமமுற்றிருந்தார்கள். இங்ஙனம் நிகழ்ந்து வருகின்ற காலத்து சத்துவதனுடைய பேரனுக்குக் குமாரனை சத்துருக்கினன்என்பவனை அக்குரூரரைச்சார்ந்தபோஜர்கள்கொன்று விட்டனர். இஃதறிந்த அக்குரூரர், இனி சத்துவதனைச் சார்ந்தவர் களால் நமக்குப்பகைநேரும். "சிறியபகையெனினு மோம்புதறேற் றூர் பெரிதும் பிழைபாடுடையர்" என்றபடி சிறியபகையாயினும் அதுவாராமல்பாதுகாவாதிருப்பின் பின்னர்பெரும்பிழையாய் முடியு மன்றே! இப்பெரும்பகையைப் பாதுகாவாதிருத்தல் முறையன்றெ ன்றுதம்முறவினர்களோடு துவாரகையை விட்டு வேறோர் நாட் டையடைந்தார்.

அன்றுமுதல் துவாரகையில் பஞ்சம், வியாதி, முதலிய மிக்க இடையூறெல்லா முண்டாயின. இவ்வளவு காலமாக யாதொரு இடையூறுமில்லாது வாழ்ந்த இந்நாடு இப்பொழுது, நலிவுறுதற்குக்காரணம் யாதோ? நன்கு ஆராயவேண்டுமென யாதவர்கள்கூடி பலராமர், உக்கிரசேனன்; முதலானோர் திரண்டிருக்கும் திரளிற் சென்றறிவித்தனர்.

அப்பொழுது கண்ணபிரான் நீவிருரைத்தபடி நம்நாட்டில் மேன்மேலும் துன்பங்கள் உண்டாகிக் கொண்டே வருகின்றன. இதை ஆராயவேண்டியது இன்றியமையாத காரியந்தானென அருளிச்செய்தனர். அப்பொழுது அந்தக னென்னும் ஓர் யாதவமுதியோன் கூறலுற்றான்.;—

யாதவர்களே! கேட்பீர்களாக! அக்குரூரருடைய தந்தைசுவபல்கர் என்பாரிருந்த காலத்திலும், யாதொரு துன்பமு நேரிட்டதில்லை. அவர்நல்லொழுக்கமும், நல்லறிவு முடையவர். உரோமபாத மஹாராஜன் காலத்தில் அநேகமாண்டுகாலமாக மழையில்லாதொழியப் பின்னர் கலைக்கோட்டு மாமுனிவரால் அக்குறையைநீக்கிக் கொண்டதைப்போல காசிராஜன் நாட்டிலும் அநேக மாண்டு காலம் மழையில்லா தொழிந்தது. பின்னர் காசிராஜன் இதற்கென் செய்வதென ஆலோசித்து சுவபல்கரைத் தன் பட்டினத்திற்கு அழைத்தனன். சுவபல்கர் அப்பட்டினம்போய்ச் சேர்ந்த மகிமையால் நாடார மழைபொழிய க்ஷேமமுற்றது. இத்துணைப்பேருபகாரஞ்செய்த இவருக்கு என்னகைமாறு செய்வதென்றுன்னி காசிராஜன் தன்புத்திரியாகிய காந்தினியை விவாகஞ் செய்து வைத்தான். அக்காந்தினியின் பெருமையைச் சிறிதுரைக்கின்றேன். அக்காந்தினி எல்லோரையும்போல பிரஸவகாலம் வந்துற்றவாறே பிறந்தவளல்லள், பன்னிரண்டியாண்டு காலம் மாதாவின் வயிற்றிலிருந்து துன்புறுத்தினள். பின்பொருநாள் காசிராஜன் அம்மா! நீ உன் மாதாவின் வயிற்றில் பன்னாளிருந்து துன்புறுத்துகின்றாயே நீ விரைவில் வெளியில்வா உன்முகங்காண யானும் உன்மாதாவும் விரும்புகின்றோம்;என்றான். அதுகேட்ட அந்தக்குழந்தை, ‘இன்றுமுதல் நல்லறிவும் ஒழுக்கமும் வாய்ந்த ஒரு பிராமணனுக்கு நாடோறும் ஒருகோதானம் வழங்கி வருவீராகில், மூன்றா மாண்டிறுதியில் வெளிவருவேனெனக் கூறியது’ அதுகேட்ட காசிராஜன் அங்ஙன

மே செய்ய அக்குழந்தை வெளிப்பட்டது. இது வாரும் காந்தினியின் பெருமை. அவள்வயிற்றிற் பிறந்தவர் அக்குரூரர் அவர் நமது துவாரகையைவிட்டு நீங்கிவிட்டாராதலான் மிகுந்த துன்பம் விளைவுற்றிருக்கிறது. ஆதலான் அக்குரூரனை இங்கு வரவழைக்கவேண்டுமென்றார். அதுகேட்ட உக்கிரசேனன் பலராமகிருஷ்ணர் முதலானோர்கள் இவ்விருத்தர் கூறுங்கூற்று மிகவும் தகுதியுடையதாயிருக்கின்றதெனக்கருதி அக்குரூரர்பால்வந்து நம்மரபினர்செய்த அபராதத்தைப்பொறுத்து நமக்கு அடைக்கலம் தந்தனம், ஆதலான் யாதொருதடையின்றி துவாரகைக்கு வரவேண்டுமென்றழைத்துக்கொண்டு வந்தார்கள் அவர் வந்தவுடன் ஸ்யமந்தகமணியின்பிரபாவத்தால் நாடாரமழைபொழியக்கொள்ளைநோய்முதலிய வியாதிகளும் நீங்கின.

அப்பொழுது கண்ணபிரான் இவ்வக்குரூரருக்கு இத்துணைப் பெருஞ் சிறப்பிருப்பதற்கு விருத்தயாதவன் கூறிய, சுவபல்கனது குடிப்பிறப்பு மாத்திரமன்று. மழையின்மை முதலிய துன்பங்களை நீக்குதற்குரிய ஆற்றல் மஹாயோகிகளுக்கும் அரியசெயலாகுமாதலான், அந்த மஹாரத்தினமாகிய ஸ்யமந்தகமணி இவரிடத்திலிருக்கவேண்டும். நிற்க, இவர்யாககாரியங்களை மேற்கொண்டு விரும்பியவர்கட்கெல்லாம் தானம் வழங்குகின்றனர்; அவ்வாறு வழங்கிவருதற்கு அந்த ஸ்யமந்தகமணியால் அளிக்கப்படுகிற பொன்னேமுக்ய காரணமாயிருத்தல் வேண்டுமேயன்றி வேறன்றெனத் தீர்மானித்து, இதையெவ்வாறாவது வெளிப்படுத்தவேண்டுமென மற்றொருகாரியத்தை மேற்கொண்டு யாதவரனைவரையுந் திரட்டிஓர்சங்கங் கூட்டினர்.

அஞ்ஞான்று கண்ணபிரான் வேறுவார்த்தைகளைக் கூறுங் கூற்றுடன் அக்குரூரரை நோக்கிச் சததன்வா நும்மிடம் ஸ்யமந்தகமணியைக் கொடுத்ததாகத்தெரிகிறது. அந்தஇரத்தினத்தின்பிரயோஜனத்தை இந்நகரவாசிகளாகிய நாம் அநுபவித்தோம். இந்த இரத்தினத்தை இப்பொழுது எனக்குக் கொடுக்கவேண்டும். வற்புறுத்திக் கேட்டதாகக் கருதற்க. இதோ எழுந்தருளியிருக்கிற என் தமையனாராகிய பலராமருக்கு அவ்விரத்தினத்தை யான் அபகரித்துக் கொண்டேனென்ற சந்தேகம் அவர் நெஞ்சை விட்டு

இன்னுமகன்றதில்லை. அவர்சந்தேகம் அகல என்மீது அநுக்கிரகம் கொண்டு அவ்விரத்தினத்தைக் காண்பிக்க வேண்டுமெனக் கூறி வாளாவிருந்தனர். அப்பொழுது அக்குரூரர், நாமிது பொழுது இல்லையென்று கூறுவோமாகில் நாமணிந்திருக்கு மாடைகளைச் சோதிப்பாரேல் நாமகப்பட்டுக் கொள்வோம் ஆதலால்இல்லையென் றுரைத்தல் தக்கதன்றெனவுன்னி கண்ணபிரானைநோக்கி விண்ணப் பஞ்செய்யத் தொடங்கினர்.

உள்ளுவாருள்ளிற் றெல்லாம்உடனிருந்தறியு மாற்றலுடைய சுவாமி! தேவரீர் திருவாய்மலர்ந்தருளியபடி சததன்வா ஸ்யமந்தக மணியை என்வயிற் கொடுத்ததுண்மையே. இதைத்தேவரீர் எப் பொழுது கேட்பீரோ என்றவருத்தம் நாடோறும் என்னெஞ்சி லுதித்துக்கொண்டிருந்ததால் சுகமற்றவனாயிருக்கிறேன். அச்சத தன்வா இரத்தினத்தைத் தரித்துக்கொண்டு, இராஜ்யத்திற்கு க்ஷே மத்தை யுண்டாக்காது நம்வயின் தந்தானேயென்ற பயத்தால்இது காறும் தேவரீர்பால் கொடுக்கா திருந்தேனே யன்றி வேறன் றென்று மடியில் ஓர் சிறிய பொற்சிமிழியில் வைத்திருந்தஅம்மணி யை யெடுத்து சபையோர் யாவருமறிய இதைத்தேவரீர் அங்கீக ரிக்க வேண்டுமென வைத்தார். அக்காலத்து அவ்விடம் ஒளிமய மாய் விளங்கலாயிற்று. பலராமர் முன்னரே கிருஷ்ணன் நம்மிருவ ருக்கும் இரத்தினம் பொதுவானதாகு மெனக்கூறினுதலால் நம க்குரியதாகும் எனக்கருதினர்.சத்தியபாமை இது நமக்குசீர்தனமாக வந்ததாதலான் நமக்கே உரியதெனக் கருதினாள். இவ்விருவரின் மனக்கருத்தறிந்த, கண்ணபிரான்இவ்விருவருக்கும் சமாதானமான வார்த்தைபேசவேண்டுமென்று, அக்குரூரரே இந்த மஹாரத்தினத் தையான்அபகரித்துக் கொண்டேனென இதுவரை யெல்லோருங் கருதிக்கொண்டிருந்தார்களாதலான் அவ்வையமகல யான் உம்மைக் காண்பிக்கச் சொன்னேன். இந்தமணி எனக்கும், பலராமருக்கும் பொதுவுற்றதுதான்.சத்தியபாமைக்குப்பிதுர்தனமாதலான்அவளுக் குமுரியதுதான்,நிற்க. இந்தஸ்யமந்தகத்தை மனமாசற்ற பிரமசாரி விரதத்தை மேற்கொண்டொழுகு மவனால் தரிக்கற்பாலது. ஏனை யோர்கள் தரிப்பரேல், அவர்கட்கிறுதித் துன்பம்நேரும். இவ்விஷ யம்நம்பிரசேனனது வரலாற்றால் நன்கறிகிறோம் யானோபதினாயிரம் பெண்களை யுரிமையாய்க் கொண்டிருக்கிறேனாதலான் தரித்தற்குரி யேனல்லேன்.சத்தியபாமையுமன்னளே. பலபத்திரரோ வென்றால்

தீண்டாமை.

(156-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆசிரமத்தால் வருந் தீண்டாமையாவது-ஒரு ஆசிரமத்தைப் பற்றியிருக்கிற ஒருவனுக்கு வரும் சூதக முதலிய தீண்டாமை அவனுடன்பிறந்த மற்றோர் ஆசிரமத்திலிருப்பவனுக்கு வாராமையாம். அஃதாவது இல்லறத்திலிருப்பவனுக்கு பித்ரு ப்ராதா ஜ்ஞாதிகள் ; முதலியோர்களின்வியோகத்தால் வருவனவும், சூதக முதலியவற்றால் வருவனவுமாகிய தீட்டுகள் ப்ரஹ்மசாரிக்கு வருவதில்லை. அதுபோலவே முற்றத்துறந்த ஸந்யாஸிக்கும் வருவதில்லையாம். குலபேதத்தால்வரும் தீண்டாமையாவது-பிராஹ்மண ஜாதியுள், வைகானஸர்கள், பாஞ்சராத்திரிகள், சுக்லயாஜுஷர்கள், கிருஷ்ண யாஜுஷர்கள், சிவத்விஜர்கள் முதலிய பிரிவையுடையவர்கள் ஒரு வருணத்தவரேனும் ஒருவருக்கொருவர் பெண்கோடல் கொடுத்தல்செய்யாமையும், சமபந்தி போஜனஞ்செய்யாமையும் முதலியனவாம். ஸந்தர்ப்பத்தால்வருந் தீண்டாமையாவது-சமணர்கள் சொல்லுகிற * கண்டுமுட்டு † கேட்டு முட்டுக்களாலும், மலஜல விஸர்ஜனங்களாலும், நித்திரையாலும், ஸம்போகத்தாலும், சவத்தைப் பின்பற்றிச் செல்லுதலாலும், அதைக்காண்டலாலும்வருவனவாம்.

தேசத்தால்வருந் தீண்டாமையாவது-ஜெகநாதம், பண்டரி, காசி முதலிய திவ்ய க்ஷேத்திரங்களிலிருக்கிற தெய்வங்களை எல்லா வருணத்தார்களும் சென்று வழிபடுதலும், பிறதேசங்களில் அவ்வாறு செய்யாமையும், தென்தேசங்களிலுள்ள கோவில்களிற் புகுந்துஸ்வாமிதரிசனம் செய்தற்குரிய ஜாதியர்களிற் சிலர் கேரள தேசமாகிய மலையாளத்திலிருக்கும் கோயிலிற்புகுந்து ஸ்வாமி தரிசனஞ் செய்யாது விலக்கப்பெறுதலும், பட்டினவாஸ ஆசாரங்கள் ஒரு சில கிராமாந்திரங்களில் விலக்கப்பெறுதலுமுதலியனவாம்.

---

* கண்டுமுட்டாவது-சமணர்கள் சைவர்களைக் காண்டல் குற்றமெனக் கருதுவதாம்.

† கேட்டுமுட்டாவது-அவர்கள் ஸம்பந்தமான விஷயங்களைக் கேட்டல் குற்றமென்பதாம்.

244

காலத்தால் வரும் தீண்டாமையாவது-க்ரஹண காலத்திலும், ஏகாதசி தினத்திலும் அன்னசுத்தியில்லாமைமுதலியனவாம். இப்பல்வேறு வகைப்பட்ட தீண்டாமையெல்லாம் மேற்குறிப்பிடப்பட்டபடி இம்மையிற் பயனறிய முடியாதனவாய், அதிருஷ்ட ரூபமாயிருக்கும் வைதிகத்தீண்டாமைகளாம். இவை, நன்மையைப் போதிப்பதற்கென்றே தோன்றிய வேதங்களாலும், வேதார்த்த ப்ரதிபாதகமான ஸ்மிருதி இதிஹாஸ புராண கர்த்தாக்களாலும் உலகநன்மை கருதி வெளியிடப்பட்டனவாம். இவற்றைக் கையாண்டுவருவதால் நன்மை யுண்டாமேயன்றித் தீமையுண்டாக மாட்டா. இப்பேதங்களெல்லாம் உலகில் நடையாடாதொழியின் தருமாசரணங்களெல்லாம் அழிந்துவிடும். அஃதழிய உலகம் நடைபெறாது. இவ்வுண்மைநிலை கண்ட சிஷ்டர்கள் தொன்றுதொட்டு இவற்றைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். ஆதலால் இவை அடிப்பட்டு வந்த ஆசரணையாயிருக்கின்றனவென்பது பெறப்படும்.

நாம் இவற்றின் உண்மைகளையெல்லாம் உற்று நோக்காது நமது சிற்றறிவைக்கொண்டு மேலெழுந்தவாறு நோக்கி இத் தீண்டாமைகளை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்றுகருதுகிறோம். இங்ஙனம் நாம் கருதுவது முறையா? என்பதைச் சிறிது ஆராய வேண்டும். நம்மிலும் எவ்வளவோ அறிவிற் சிறந்தவர்களால் நன்மைகண்டு ஆசரிக்கப்பட்டுவந்த இவற்றை ஒழித்துவிடுவது சாத்யமான காரியமில்லை. ஒருவாறு இவற்றை ஒழித்துவிட வேண்டுமானாலும் மனுஸ்மிருதியிலுள்ள சில அம்சங்களைக் காலத்துக்கேற்றவாறு மாற்றி ஸ்மிருதி செய்த பராசரபகவான் போன்ற வேதபாரங்கதராய், அஹங்காராதிகளற்றவராய், பொது நோக்குடையவராய், தீர்க்கதரிசியராய், ஸ்வாநுஷ்டானமுடையவராய், நன்கு மதிக்கப் படுபவராய், ஈசுவர ஸாக்ஷாத்காரமுடையவராயிருக்கின்ற பெரியோர்கள் கூடியே செய்யத்தக்கதாயிருக்கின்றது. நம்மனோரால் ஒன்றை ஆக்குதற்கும் அழிப்பதற்கு முடியாதன்றோ. இனி இத்தீண்டாமை ஈசுவராஜ்ஞாரூபமானதென்பது தெரிந்து அநுஷ்டித்துவருவதே நலமென்று தோன்றுகிறது.

ப. அ.

திருக்குறட்பொதுமை.

———:O:———

ஓரஞ்சாராது உண்மையுரைக்கும் சங்கமருவிய சான்றோர்கள் திருக்குறளின் உண்மையறிந்துஅதற்குச் சிறப்புப்பாயிரந் தந்தார்களாதலின் அவற்றையே கருவியாகக்கொண்டு இங்குத் திருக்குறளின் பொதுமை ஆராய்தல் சாலநன்றுமாதலால் அவ்வாறே ஆராய்ந்துரைக்கப்படும்.

ஒருநூலைப் பயின்றுகொள்ளுதற்கு முற்படுவார் முதலில் நூல் செய்யப்பட்டவரின் பெருமையையும், நூலின் பெருமையையும், நூலிற் சொல்லப்படும் பொருளின் பெருமையையும் தெரிந்து கொள்ள வேண்டுதல் முறைமையாம். அம்முறையெல்லாம் அறிவிக்கவேண்டி இச் சிறப்புப்பாயிரந்தந்த ஆசிரியர்கள் திருவள்ளுவரின் பெருமையையும் அவர் நூலின் பெருமையையும், அதிற் சொல்லப்படும் வஸ்துவின் பெருமையையும் நன்றாய் எடுத்து விளக்கியுள்ளார்கள். இவற்றைப் பின் குறிப்பிடுவனவற்றால் அறிக.

> "நாடாமுதனான்மறைநான் முகனாவிற்
> பாடாவிடைப்பாரதம்பகர்ந்தேன்—கூடாரை
> எள்ளியவென்றியிலங்கிலைவேன்மாறபின்
> வள்ளுவன்வாயதென்வாக்கு"

என்று நாமகள் கூறியதாகச் சொல்லப்பட்டுளது. இதன் பொருள் ஆதியில் நான் நான்முகன் வாயினின்று வேதஸ்வரூபமாய் வெளிப் போந்தேன்; இடையில் வேதவியாஸபகவான் வாயிலாக பாரதரூபமாய் வெளிவந்தேன், இறுதியில் திருவள்ளுவர் வாயிலாகத் திருக்குறள் வடிவாகத் தோன்றினேனென்றாள் என்க. வேதம் மிகுந்த அறிவையுடையவர்களாலே அப்யஸிக்கத் தக்கதாயும், அதிக்ருதாதிகாரமாயும், விட்டபடியால் அக் குறையகற்ற இதிஹாஸரூபமாய் வெளிவந்தாள். மஹாபாரதமும் வடமொழி வல்லாத் தமிழர்க்குப் பயன்படாமையால் அக் குறையகற்றத் திருவள்ளுவர் வாயினின்றும் எல்லோரும் எளிதிற் பயிலுதற்குரிய திருக்குறள் வடிவாய் வெளிவந்தாள். இதனான் வேதார்த்தம் பாரதமென்பதும், பாரதார்த்தம் திருக்குறளென்பதும் விளங்குகின்றன. பாரதார்த்தம் திருக்குறளென்பதை

“எப்பொருளும்யாருமியல்பினறிவுறச்
செப்பியவள்ளுவர்தாஞ்செப்பவரும்—முப்பாற்குப்
பாரதஞ்சீராமகதைமனுப்பண்டைமறை
நேர்வனமற்றில்லைநிகர்”

என்று பாரதம்பாடிய பெருந்தேவனாரும்வேதத்தையும்வேதோபபிருஹ்மணங்களான பாரத ராமாயண மனுஸ்மிருதிகளையும் ஒப்புக் கூறியிருத்தலால் அவற்றின்வழியாக வந்திருக்கும் திருக்குறளும் அவற்றிற் சொல்லியபடியே உபாயோபேயங்களைப் பிரதிபாதிப்பதென்றாயிற்று.

நாமகள், திருவள்ளுவர் நான்முகன் அவதாரமாவார் எனக் குறிப்பித்ததை உட்கொண்டு,

“நான்மறையின்மெய்ப்பொருளைமுப்பொருளாநான்முகத்தோன்
றான்மறைந்துவள்ளுவனாய்த்தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்கசென்னிவாய்வாழ்த்துகநன்னெஞ்சம்
சிந்திக்ககேட்கசெவி”

என்று உக்கிரப் பெருவழுதியாரும்,

“ஐயிருநூறுமதிகாரமூன்றுமா
மெய்பாயவேதப்பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தானுலகிற்குத்தான்வள்ளுவனாகி
யந்தாமரைமேலயன்”

என்று காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனாரும் கூறினார்கள். இதனான் நூலாசிரியரின் பெருமை கூறியபடி.

பரப்ரஹ்மமாகிய கடவுள் ஹம்ஸரூபியாயிருந்து வேதத்தை உபதேசிக்க அதைப்பயின்ற வாய்மையுடையவனாகிய பிரஹ்மாவே திருவள்ளுவராய் அவதரித்தபடியால் அவருரைத்த திருக்குறளும் வேததுல்யமாகவே இருக்குமென்பதை வலியுறுத்த

“செய்யாமொழிக்குந் திருவள்ளுவர்மொழிந்த
பொய்யாமொழிக்கும்பொருளொன்றே—செய்யா
அதற்குரியாரந்தணரேயாராயினேனை
இதற்குரியரல்லாதாரில்”

என்று வெள்ளி வீதியாரும்,

"ஓதற்கெளிதாயுணர்தற்கரிதாகி
வேதப்பொருளாய்மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதோறுள்ளுதோறுள்ளமுருக்குமே
வள்ளுவர்வாய்மொழிமாண்பு"

என்று மாங்குடி மருதனாரும்,

"எ தமிழ்வள்ளுவரின்குறள்வெண்பாவினால்
ஓதியவொண்பொருளெல்லாம் உரைத்ததனால்
தாதவிழ்தார்மாறதாமேதமைப்பயந்த
வேதமேமேதக்கன"

என்று பெருஞ்சித்திரனாரும்,

"....................முறையால்
வேதவிழுப்பொருளை வெண்குறளால்வள்ளுவனார்
ஓதவழுக்கற்றதுலகு"

என்று மதுரைப் பெருமருதனாரும்,

"வேதப்பொருளைவிரகால்விரித்துலகோர்
ஓதத்தமிழாலுரைசெய்தார்—"

என்று சேயலூர்க் கொடுங்கண்ணனாரும்,

"ஆரியமுஞ்செந்தமிழுமாராய்ந்திதனினிது
சீரியதென்றொன்றைச்செப்பரிதால்—ஆரியம்
வேதமுடைத்துதமிழ்த்திருவள்ளுவனார்
ஓதுகுறட்பாவுடைத்து"

என்று வண்ணக்கஞ்சாத்தனாரும் உரைத்தார்கள். இங்ஙனம் இவர்கள் இந்நூல் வேதஸாம்யமுடையதெனக் கூறியதினால் பிரமாணமுடையதென்பதும் வைதிக ஸமயத்தார் யாவரும் கையாளத்தக்கதென்பதும் பெறப்பட்டன. இனி, இந்நூலின் பெருமையையும் வியாபகத்தன்மையையும் உரைக்கவந்தவிடத்து,

"தேவிற்றிருமாலெனச்சிறந்ததென்பவே
பாவிற்றுவள்ளுவர்வெண்பா"

என்று கவிசாகரப் பெருந்தேவனாரும்,

"மாலுந்குறளாய்வளர்ந்திரண்டுமாணடியால்
ஞாலமுழுதுநயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந்தங்குறள்வெண்பாவடியால்வையத்தார்
உள்ளுவவெல்லாமளந்தாரோர்ந்து"

என்று பரணரும்,

"கானின் றதொங்கலாய்காசிபனூர்தந்ததுமுன்
கூநின்றளந்ததுறளேன்ப—தூன்முறையான்
வானின்றுமண்ணின்றளந்ததேவள்ளுவனூர்
தாமின்றளந்ததுறள்"

என்று பொன்முடியாரும் உரைத்தார்கள். இப்பாடல்களால், எல்லாத் தெய்வங்களிலும் திருமால்சிறந்து விளங்குவதுபோல எல்லா நூல்களிலும் திருக்குறள் சிறந்து விளங்குவதென்றும், திருமால் வாமனரூபியாயிருந்து உலகெல்லாவற்றையும் அடியிட்டளந்து தன் வயின் அடக்கியதுபோல, திருவள்ளுவர் தம் திருக்குறளடியால் உலகத்தார் கருதப்படுவனவற்றையெல்லாம் ஆராய்ந்தளந்தார் என்றும் சொல்லப்பட்டன. இங்குத் திருக்குறளிற்கு ஒப்புமை கூறுமுகத்தான் திருமாலிற்கு ஆதிக்யமும், வியாபகமும் கூறினாராயிற்று. நிற்க,

"உப்பக்கநோக்கியுபகேசிதோண்மணந்தா
ளுத்தரமாமதுரைக்கச்சென்ப—விப்பக்கம்
மாதாநுபங்கிமறுவில்புலச்சேந்நாப்
போதார்புனற்கூடற்கச்சு"

என்று நல்கூர் வேள்வியார் உரைத்தார். இதுவும் திருவள்ளுவர் பெருமையைப்பற்றியே பேசுகின்றது. கண்ணபிரான் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்து அருச்சுனன் வாயிலாகக் கீதையை உபதேசித்து அவ்வழியிலே மாந்தர்களின் உள்ளிருளகற்றி உத்தரமாமதுரைக்கு ஆதாரமாய் விளங்கியதுபோல் திருவள்ளுவரும் தாமுரைத்த நூலின் வாயிலாகப்பிணக்குற்றசமயத்தவரின் பிணக்ககற்றி உண்மைப்பொருளை விளக்கி மாந்தர்களின் உள்ளிருளகற்றியதனுல் தக்ஷிணமாமதுரைக்கு ஆதாரமாய் விளங்கினார் என்று சொல்லப்பட்டது. இங்குக் கண்ணபிரானை எடுத்துக் கூறியதற்கு மற்றோர் பொருத்தமும் உளது. அஃதாவது கண்ணபிரான் அருளிய கீதை கிருஷ்ண கீதை எனப் பெயர்பெறாது பகவத்கீதையென்று பொதுப்பெயரால் வழங்கப்பட்டதுபோல இவருரைத்த திருக்குறளும் பொது நூலென்றே வழங்கப்படுகிறது. இந் நயம் பற்றியும் இங்குக் கண்ணபிரானை எடுத்தாண்டாரென்க.

இச் சிறப்புப்பாயிரந்தந்த பொது நோக்குடைய சான்றோர்கள் வேறு எந்தத் தெய்வத்தைப்பற்றியும் ஒரு சிறிதேனும் எடுத்துப்பேசாது திருமாலைப்பற்றியே பலரும் ஏககண்டராய் உரைத்த

படியாலும், பொது நோக்குடையவராகிய திருவள்ளுவருக்கும், அவருரைத்த பொது நூலுக்கும் ஒப்புமை காட்டவந்த விடத்துத் திருமாலையே எடுத்துக் கூறியபடியாலும், இங்ஙனம் பிரஸ்தாபிக்க வேண்டிய அவசியமில்லாவிடத்திற் கூறியதற்குத் தக்கதோர் காரணம் வேண்டுகையாலும், திருமாலே ஆதிமூலமாய்ப் பொதுநின்ற தெய்வமென்பதும், அவனைப்பற்றிப் பேசுகிற நூலும், சமயமும், பொதுநூலும், பொதுச்சமயமுமாமென்பதும், விளங்குகின்றன. மேலும் திருமாலைக்குறித்துப்பேசுகிற நூலானது பொது நூலாகாதொழியின் இங்கு நாமகள் வேதார்த்தம் பாரதமென்றும், பாரதார்த்தம் திருக்குறளென்றும் உரைத்திருக்கமாட்டாள். இக் குறிப்பினாலும் திருமால் சமயம் பொதுச்சமயமென்பது பெறப்படும்.

ஆக, சங்கத்தார்கள் திருக்குறளை எவ்வாறு க்ரஹித்தார்கள் என்று ஊகித்துப்பார்த்தால் வேதங்களும், மனுஸ்மிருதியும், பாரத ராமாயணமும்போலே திருக்குறளும் அந்தரங்க திருஷ்டியாகத் திருமால் சமயத்தையே தழுவிக்கொண்டதென்றார்களென்றும், அங்ஙனந் தழுவிக்கொள்ளினும் அது பொதுநூலாந் தன்மையிற் குறைபடாதென்று க்ரஹித்துக்கொண்டார்களென்றும் அறியக்கிடக்கின்றன.

இத்துணையுங் கூறியவாற்றால், திருவள்ளுவர் நான்முகன் அவதாரம் என்பதும், அவருரைத்த நூலும் வேதஸாம்யமுடையதென்பதும், வேதோபப்ருஹ்மணங்களான ஸ்மிருதிஇதிஹாஸங்களைத் தழுவியதாகவேயுள்ளது இந்நூலென்பதும், திருமாலைப்போல வியாபகமுடையதாயும், பெருமையுடையதாயும் இது விளங்குகிறதென்பதும், இந்நூலுக்கு ஒப்புமை கூறுமுகத்தால், திருமால், ஆதிக்யமும், வ்யாபகமுமுடைய பரதெய்வமென ஒப்புக்கொண்டார்களென்பதும், திருவள்ளுவர் கீதாசாரியனைப்போலத் தென்திசைக்கு ஆதாரபூதராவாரென்பதும், திருமாலே பொதுநின்ற தெய்வமென்பதும், அவனைக் குறித்துப்பேசும் நூலும் சமயமும் பொதுநூலும் பொதுச்சமயமுமாமென்பதும், திருக்குறளும் சுருதி ஸ்மிருதி இதிஹாஸங்களைப்போல அந்தரங்கதிருஷ்டியாகத் திருமால் சமயத்தையே தழுவிக்கொண்டதென்பதும், அங்ஙனம் தழுவிக்கொள்ளினும் பொதுநூலாம், தன்மையிற் குறைபடாதென்பதும், இவ்வாறே சங்கத்தார்களும் கருதினார்களென்பதும் உரைக்கப்பட்டன.

இனித் திருவள்ளுவர் வாக்யங்களாலும் இவ் விஷயங்கள் ஆராயப்படும்.

(தொடரும்.)

ப. அ.

பாகவதாபசாரம்.

பாகவதாபசாரமாவது:— பகவத்ஸம்பந்திகளான அடியார் திறத்துச்செய்யத்தகாத கார்யமாம். இது, ஈசுவராங்கீகாரத்திற்குத் தடையாயிருக்கின்ற கொடியசெயலாம். இதைப்பற்றியே "ஜ்ஞாநாநுஷ்டானங்களை ஒழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள் பக்கல் ஸம்பந்தமே அமைகிருப்போலே அவையுண்டானாலும் இழவுக்கவர்கள்பக்கல் அபசாரமே போரும்" என்று லோகதேசிகன் அருளிச்செய்தார். இதனால் பகவல்லாப ஹேதுவாகச் சொல்லப்பட்ட அறிவொழுக்கங்களில்லாவிடினும் அறிவொழுக்கமுடையவரின ஸம்பந்தத்தால் பேறுஸித்திக்கும். அறிவொழுக்கங்களுண்டானாலும், பாகவதாபசாரம் நேருமாகில், அதுவே பகவத்விஷயத்தை இழந்து போகைக்குக் காரணமாயிருக்குமென்பது பெறப்பட்டது.

பாகவதர்களின் ஸம்பந்தத்தால் கெதிஸித்திப்பதற்கும், அவர்கள் விஷயத்திற் செய்யுமபசாரத்தால் கெதி இழப்பதற்கும் "இவ்வர்த்தம் கைசிகவிருத்தாந்தத்திலும், உபரிசரவஸு வ்ருத்தாந்தத்திலுங்காணலாம்" என்று இரண்டு விருத்தாந்தங்கள் எடுத்துக்காட்டினார். இவ்விரண்டு விருத்தாந்தங்களில் கைசிக விருத்தாந்தத்தால் நம்பாடுவார் என்ற ஒரு பரமபாகவதரின் ஸம்பந்தத்தால் ஒரு ப்ரஹ்மராக்ஷஸு கெதிபெற்றதென்பது அறியலாகும். அபசாரத்தால் கெதி இழப்பதற்கு உபரிசரவஸு விருத்தாந்தத்தால் அறியவேண்டும். அதுவருமாறு,

உபரிசரவஸு என்பவன் ஓர் அரசனாவான், இவன் வித்யாதிகனாய், பாஞ்சராத்ர தருமத்தில் நிலைநின்றவனாய் பகவதாராதனநிஷ்டனாய் தன்னுடைய தபோசக்தியால் தன் பரிவாரங்களோடு விமானமீதேறி ஸஞ்சரித்துத் திரிகிறகாலத்தில் இவனிடத்தில் மஹருஷிகள் தேவர்கள் என்ற இவ்விருதிறத்தார்களும் தான்யத்தால் யாகஞ்செய்வதா? சாகத்தால் யாகஞ்செய்வதா? என்று சம்சயங்கொண்டு தம்முள் மாறுபட்ட வழக்கைத் தெரிவித்தார்கள். அப்பொழுது உபரிசரவஸு தேவர்களிடத்திற் பக்ஷபாதங்கொண்டு சாகத்தாலே யாகஞ்செய்ய வேண்டும் என்றான். இதுகேட்ட மஹரிஷிகள் கோபங்கொண்டு உபரிசரவஸுவை நோக்கி "நீசொல்லியது வேதஸூத்ரங்களுக்கு விரோதமாகில் உன்னுடைய ஆகாசசஞ்சாரமுமாறி ஆகாசத்தினின்று இப்பொழுதே பாதாளத்தில் விழக்கடவாய்; நாங்கள் விரோதஞ் சொன்னோமாகில் அப்படியே பாதாளத்தில் விழக்கடவோம்." என்று சபிக்க அப்பொழுதே சாஸ்திரவிரோதமாய்ச் சொல்லி பாகவதாபசாரப்பட்ட உபரிசரவஸு பாதாளத்தில் விழுந்தான். இதனால் பாகவதாபசாரம் மிகவும் க்ரூரமென்பதுரைக்கப்பட்டது.

மாஸ்திரம் முதலான படைகள் யாவையும்விடுத்து, தன் கைவரிசைகள் எல்லாவற்றையும் காட்டினான். அதனைக்கண்ட சக்ரபாணி தனது திருக்கைகளால் திருவாழியாழ்வானை அனைடுநாடிபபொழுதல் ஆயிரம்முறை வலமாகச்சுழற்றி அவனமேல் எவினான். நிசாசரர்களாகிய இருளைத் தொலைப்பதற்கு ஊழித்தீயுடன் தோன்றிய ஓர் உதய பானுவை ஒத்த அந்தநேமியும் உடனே காலநேமியின் சிரத்தினைத் துணித்தது. அதனால் மிகவும் பருத்துக் கொழுத்திருந்த அவனுடைய சரீரம் சடக்கென்று கீழேவிழுந்தது. அப்பொழுது அது ப்ரசண்ட மாருதத்தின் வேகத்தினால் தள்ளுண்டபெரியதொரு நீலமலை அறைபட்ட சிகரத்தோடும் அடியற்று நிலத்திலே சாய்ந்ததுபோல் தோன்றிற்று. ஆனாலும் கணக்கில்லாத அசுரர்களைக் காய்ந்து கொன்ற அந்தநேமி அக்காலநேமியின் உடல்வன்மையாற் கல்லென்று தெரித்தது. ஆச்சரியம்! ஆச்சரியம்!! அக்கொடியோனுடைய தவ வலிமையை என்னென்று கூறுவது? அது நிற்க.

எவ்வாற்றானும் அவன் இறந்துபட்டதை யெண்ணி அமரரும் முனிவரும் ஆனந்தபரவசராயினர். தேவர்களும், சித்தர்களும், கந்தர்வர்களும், சாரணர்களும் தங்கள் துன்பந்துடைத்த எம்பெருமானைத் திருவடிதொழுது ஸ்தோத்திரம் செய்தார்கள். அநந்தரம் அழகனும் அவ்வனத்தை நீங்கி எப்பொழுதும்போலத் தன் அஷ்டாங்கவிமானத்திற்கு எழுந்தருளலானான். இமையவரும் தங்கள் தங்கள் இருப்பிடம் ஏகினார்கள்.

திருமாலினுடைய நேமி தெரித்துவீழ்ந்த காரணத்தால் அந்த இடத்திலுண்டான தீர்த்தமும்சக்ரதீர்த்தமென்று வழங்கப்படுகிறது. சக்ரபாணியான ஸ்ரீமந்நாராயணன் அந்தஸ்தலத்திலும் நித்யவாஸம் செய்கிறான். ஆதலால் அங்குவாழ்பவர்களுக்குக் கருதியனவெல்லாம் கைகூடுமென்று சொல்லப்படுகிறது. ப்ருகுமஹரிஷி முதலான பெரியோர்கள் அநேகர் அங்குள்ள பெருமானை ஆராதித்துப் பெருமையுற்றனர். அந்தச் சக்ரதீர்த்தத்தை தரிசித்தமாத்திரத்திலே சகல பாதகங்களும் தொலைகின்றன. அதில் ஸ்நாநம் செய்வதன்பலனைச் சொல்லவும் வேண்டுமோ? தினந்தோறும் அதில் நீராடுவோர் தீவினைகள் யாவும் தீர்ந்து விஷ்ணுபக்தர்களாய் விளங்குவார்கள். ஆடிமுதலான நான்கு மாதங்களிலும் அதில் மூழ்குபவர்கள் அளவில்லாத அச்வமேதம்செய்த பலனை அடைவர். மாசிமகமும், த்வாதசியும், சுக்ர

வாரமும் ஆகிய தினங்களில் அதில் தீர்த்தமாடுதல் மிகவும் விசேஷமாகும்'' என்று இந்தவிதமான அந்தக்ஷேத்ர மான்மியத்தை வியாச பகவான் விரிவாகச் சொல்லிமுடித்தார்.

புலஸ்தியருக்குப் புதல்வனையளித்தல்.

பின்பு சௌனகாதியர் வியாசரை நோக்கி, ''பரமகாருணிகரான ஓ ஸ்வாமியே! தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய ஸ்தலவைபவத்தினால் அடியோங்கள் ஸந்துஷ்டரானோம்; இப்பொழுது மதுரையின் வடகிழக்கிலுள்ள தீர்த்தத்தின் மஹாத்மயத்தைத் தெரிவிக்க வேண்டுகிறோம்:'' என்று வினயமாக விண்ணப்பஞ் செய்தனர். அவ்வாறே வ்யாஸரும் சொல்லத் தொடங்கினார்.

''யானைமலையின் விசேஷத்தையும் அங்கு நரஸிம்ஹரூபமாய் எழுந்தருளியுள்ள எம்பெருமானையும் பற்றி முன்னர் யாழ்முனிவராகிய நாரதர் எனக்குச் சொன்னதை உங்களுக்குச்சொல்லுகிறேன். அலைகளுடன்கூடி ஆரவாரமுடையதாய், பொன்கொழித்தோடும் புண்ய தீர்த்தமான, வைகையாற்றின் வடகரையிலிருந்து இருகூப்பிடுதூர எல்லையில் வாரணத்திரி யென்றொருமலையுண்டு. அது ஸ்ரீகூடலழகப் பெருமாளுடைய திருக்கோயிலுக்கு ஓர் அரையோஜனையளவு அப்பாலுள்ளதாகும்.;—

தாவுஞ்சிறையளிபம்பியதளபந்தியுநறுமென்
பூவுங்குளிர்நிழலும்பயில்புள்ளுங்குடிகொள்ளும்
காவுந்தவழ்சிறுதென்றலும்கனிப்பாலையும்சினைத்தே
மாவும்பலவினமும் பலவனமும் பொலிவனவே

பலசாகைகளோடும் பணைத்தோங்கிவளர்ந்து, மாதுர்யமான பலவர்க்கங்கள் நிறைந்த மாவும், பலாவும் முதலான மரங்களடர்ந்து நெருங்கிய அடவிகள் அநேகம் அங்கே உள்ளன. கொடிகளும் செடிகளும் நிறைந்தனவாய்க் குளிர்ந்தநிழலைச் செய்கின்ற பூஞ்சோலைகள்பல இடையிடையே அமைந்து அவ்வனத்தை அலங்கரிக்கின்றன. அந்தப்ரதேசங்களில் பக்ஷிஜாலங்கள் உத்ஸாஹமாய்ப் பறந்து விளையாடுவதும், வரிசைவரிசையாய்ச்சூழ்ந்த வண்டினங்கள் தமதுமெல்லிய சிறகுகளால் இனியஓசையை எழுப்பி ரீங்காரஞ்செய்வதும், இளந்

தென்றற்காற்று மிகவும் மிருதுவாகவீசி இன்பமளிப்பதும், தேனொழுகுகின்ற புஷ்பங்கள் திவ்யகந்தத்தோடு பரிமளிப்பதும், ஆகிய வற்றைப் பார்ப்பவர்களுடைய மனமுங்கண்ணும் பரவசமாகுமென்பதில் ஐயமேயில்லை. அதுமட்டுமன்று அங்குள்ளமரக்கிளைகளில் குரங்குகள் கூட்டங்கூட்டமாய்த் தாவிக்குதித்தலால் கமுகங்குலையும் கதலிக்குலையும் குலைந்து நாலாபக்கங்களிலும் சிதறிவிழுகின்றன. அங்ஙனம் தாவிய கடுவன்கள், மரக்கொம்புகளிலுள்ள தேனிறால்களைப்பற்றி மந்திகளின் வாயில் மதுவைப்பிழிந்து அன்போடு உண்பிக்கும் அருஞ்செயல் மிகுதியும் வியப்பைத் தருவதாகும். இன்னும் அம்மலைச்சார்பில் அருவிகள் ஆரங்களையுருட்டிக் கல்லென்னும் ஒலியோடு தரைகிழிய விழுந்து ஓடிவருகின்றன. அவற்றில் அருந்தவர்க்குரிய மங்கையரனைவரும் புனல்விளையாடிப் பொழுதுபோக்குவார்கள்.

இவ்வாறான வளங்களையுடைய அக்குன்றின் ஒருசார் உபவனத்தில் ஓர் அழகிய பூம்பொய்கையுள்ளது. ரோமசரென்னும் மஹரிஷியின் ஆசிரமம் அதன்கரையருகாக அமைந்துவிளங்கும். அவ்விடத்தில் தவம்புரிகின்ற அவர் தம் யோகமுதிர்ச்சியால் அம்மலையின் த்வாரத்தில் நரஸிம்ஹமூர்த்தியான நாராயணனை ப்ரத்யக்ஷீகரித்தார். அப்போது தேவர்கள் ஆசீர்வசனங்களைப் புகன்று பூமாரி பொழிந்தனர். கனலைச்சொரிகின்ற கண்ணிணைகளோடு எரிவீசுகின்ற திருமேனியையுடைய அந்த நரஸிம்ஹத்தின் தோற்றம் கண்டவர்களை நடுநடுங்கச் செய்தது.

பூர்வம், அமரர்களெல்லாம் அசுரரை அடிதொழுமாறு ஆணைசெலுத்திக் கொடுமைபுரிந்து, தன்னுடைய புத்திரனான ப்ரஹ்லாதனைப் பலவிதத்தில் ஹிம்ஸித்த ஹிரண்யாசுரனுடைய உடலத்தை இருபிளவாக வகிர்ந்து போகட்டதனாலும் அந்தஸிம்ஹத்தின் கோபம் சிறிதும் தணியாமல் மூன்றுலகத்தையும் த்வம்சம்செய்ய மூண்டது போலத் தோன்றிற்று. ப்ரஹ்மா இந்திரன் முதலான தேவர்களெல்லாம் அதுகண்டு பெரிதும் அச்சமுற்று அரசனிடம் சென்று முறையிட்டனர். அவனும் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி மற்றைத்தேவர்களின் உதவியுங்கொண்டு தான்ஒருபெரிய சிம்புட்பறவையாக உருவெடுத்து அந்தநரஸிம்ஹத்தை நாசம்செய்ய நினைத்தான். உடனே, நான்முகன் தலையாகவும், இரவியும் மதியும் இருவிழிகளாகவும், திசை காவலர்கள் கால்களாகவும் அமைய, தான்உயிர்நிலையாக

நின்று அவன் ஒருபெரிய சரபத்தை உண்டாக்கினன். அப்பொழுது நரஸிம்ஹம் அளவுகடந்த சீற்றத்தோடு அதனையெதிர்த்து அதிசீக்கிரத்தில் தனதுநகங்களால் கிழித்துக்கொன்றது. அதனால் அந்தச் சரபம் அலறிக்கொண்டு கீழேவிழுந்த சப்தம் இடிமுழக்கம்போல் எல்லாத்திசைகளிலும் செல்ல, உலகமெல்லாம் நிலைகுலைந்தன. உடனே வானவர் ஒளியுமிடந்தேடி உயிர்பிழைக்கக்கருதினர். ஆனால் ப்ரஹ்லாதாழ்வானுடைய ப்ரார்த்தனைக்கிசைந்து ஸ்ரீமந்நாராயணனும் இணங்கணிந் தருள்புரிந்தான். அவ்வண்ணமே அவன் சாந்தமூர்த்தியாகிப் பின்பு அந்தயானைமலையின் ஒருகுகையிலே யோகநரஸிம்ஹனாக எழுந்தருளுவானாயினன். அதுநிற்க.

புலஸ்திய முனிவர் புதல்வனைப்பெறவேண்டி அளவிறந்த பக்தியோடு ஹஸ்திகிரியில் அச்சுதனை ஆராதித்துவந்தார். அஷ்டாங்கவிமானத்தில் அமர்ந்தருளும் ஸ்ரீ சுந்தரராஜன், அவருடைய தபோமஹிமையால் அவ்விடத்தில் அவருக்குப்ரஸந்நனானன். உடனே ஸர்வவ்யாபியாயுள்ள அவனைப் புலஸ்தியர்புகழ்ந்துஸ்தோத்திரம்செய்தார். அதனால் திருவுள்ளமுவந்த அழகன் முனிவர் விரும்பியதை மொழியுமாறு கட்டளையிட்டான். அவர் தான் வேண்டியது புத்திரப்பேறென்று விடையளித்தார். 'அவ்வண்ணமே ஆகுக' என்று அருள்புரிந்த, எம்பெருமான் பின்னும் அவரை நோக்கி, 'ஓ முனிவனே! உன்னுடைய அருந்தவத்தின் பெரும்பேறாக நாம் உனக்குக் காட்சியளித்தோம்; விச்ரவஸ் என்னும் உத்தமமான புத்திரனொருவனை நீ விரைவினில் பெறுகுவை; யோகத்தினாலும், ஞானத்தினாலும், கல்வியினாலும், கருணை முதலிய நற்குணங்களாலும் அவன் உன்னைப்போலவே உயர்ந்து விளங்குவான்:' என்று சொல்லிவிட்டு மறைந்தனன்.

இவ்வாறு நிகழ்ந்ததைப் புலஸ்தியர் தன் தர்ம பத்தினியிடம் தெரிவிக்க, பதிவ்ரதையான அவளும் பேரா உகந்து எப்பொழுதும் போலத் தன் பர்த்தாவையே தெய்வமாகக் கருதி அவர் பணிவிடைகளைச் செய்து வந்தாள். அவ்வாறாகச் சிலநாட்கள் சென்றபிறகு, அவள் தம் குலத்தைவாழ்விக்கும் குமாரனொருவனைப் பெற்றெடுத்தாள். அக் குழந்தையும் அழகமைந்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருவதைக் கண்ட புலஸ்தியர் தான் சித்திபெறுதற்பொருட்டு மேருகிரியின் சாரலை மேவினர். அவ்விடத்

தில் அவர் மாயவனையே மனதில்நினைத்து அன்புடன் வழிபட்டு அழிவில்லாத வீட்டின்பமடைந்தார்.

முன்னாளில் நாரதமுனிவர் எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோலுணர்த்திய இந்தப் புண்ணிய கதையை வைகாசிமாஸம் சுக்லபக்ஷ த்வாதசியில் வாசித்தவர்களும் வாசிக்கக் கேட்டவர்களும் கர்மபந்தத்தினின்றும் நீங்கி மோக்ஷமடையக் கடவர். நாரஸிம்ஹமென்னும் அந்த மலையின் பெருமையைப் பேசுபவர்கள் கல்பாந்த காலம் ப்ரஹ்ம லோகத்திலிருந்து பின் முத்தியும் பெறுவார்கள்:'' என்று சொல்லி முடித்து, வ்யாஸர் அவர்கள் மீண்டும் கேட்க விரும்புவது யாதென்று வினவினர்.

அம்பரீஷனுக்கு அருள்புரிதல்.

அங்ஙனம் வினவப்பட்ட சௌனகாதி மஹரிஷிகள் வேதவ்யாசரைப் பார்த்து, "ஓ முனிவர்கள்நாயகமே! விஷயாநுபவத்தின் வெம்மையால் வெதும்புகின்ற அடியோங்கள் தேவரீருடைய கருணையாகிய தண்ணிய நீரினால் தாபந்தீருமாறு, அந்தப் பரமபுருஷனுடைய புண்ணிய சரிதத்தையே மேலுங்கேட்க ஆர்வமுடையவர்களாகிறோம்'' என்று தெரிவிக்க, அந்த ரிஷிசிரேஷ்டரும் பின்வருமாறு பேசுவாராயினர்.

"முன்காலத்தில் பரம வைஷ்ணவனும் பாகவதோத்தமனுமான அம்பரீஷனென்னும் அரசனொருவ னிருந்தான். அவன் தன்னுயிர் போல மன்னுயிர்புரந்து, உலகமுழுதும் தர்மநெறி தவறுமற் பாதுகாத்தற்பொருட்டு, கடல்சூழ்ந்த நிலப்பரப்பெல்லாங் கடந்து அப்பாற் செல்லவும் நினைத்துத் தென்திசைநோக்கிப் புறப்பட்டான். சதுரங்கபலத்தோடும் கூடிய சைநியம் சமுத்ரம்போலத் தன்னைப் புடைசூழ்ந்துவரத் தேரை நடத்திச்சென்று, அவன் தென் தேசத்திற்கு ஒரு சிரோபூஷணமாகத் திகழ்கின்ற பாண்டியநாட்டில் தெக்ஷிணமதுரையைக் கண்ணுற்றான்.

சந்த்ரகுலத்திலுதித்த சக்ரவர்த்திகளாற் பரிபாலிக்கப்பட்டு வருகிற அந்த மதுரைமாநகரம் அழகினால் இணையற்றது. அந் நகரியைச் சுற்றிலும் அகழும் மதிலும் அரண்களா யமைந்துள்ளன. இடை

விடா நடுக்கீச் சேர்க்கப்பட்ட கல் வரிசைகளோடு பொருந்தின கரைகளையுடைய அந்த அகழி ஆழமும் அகலமுமுடையதாய் அணுகுவோரை அச்சுறுத்துகின்றது. அதனுட்புறத்தில் அதியுன்னதமாய் வளர்ந்த பொன்மயமான புரிசைகள் சக்ரவாளகிரியை ஒப்பத்தோன்றுகின்றன. முத்துக்களாலும் ரத்னங்களாலும் இழைத்து ஒளி வீசுகின்ற கபாடங்களையுடைய வாசல்களில் கோபுரங்கள் ஆகாசத்தை அளாவி யுயர்ந்து அதிசயத்தை விளைப்பனவாகும்.

அவ்வாசல்களைக் கடந்து அப்புறஞ்சென்றால், சதுக்கங்களும், சந்திகளும், கடைவீதிகளும், நாடகவரங்கமும், விளையாடிடங்களும், செய்குன்றுகளும், இளமரக்காக்களும் வெள்ளிடைகளுமாக எங்கணும் விளங்கி இன்பமளிக்கும். துகிற் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட வீதிகள் யாவும் விசாலமாய்த் தோன்றும். ரதமும், கஜமும், துரகமும், பதாதியும் எப்பொழுதும் இடைவிடாமல் நெருங்குகின்ற அந்த நீண்ட தெருக்களில் இந்திரனோடும் குபேரனோடும் இணையிட்டுச் சொல்லுதற்குரிய செல்வக்குமரர் பலரும் சிவிகையாதிய வாகனமூர்ந்து செல்லுவார்கள். மது வொழுகுகின்ற மலர்களால் தொடுத்த கோதையையணிந்த மாதர்களநேகர் கூட்டங் கூட்டமாய்ப் போய்க்கொண்டிருப்பார்கள். தெருக்களின் இரு பக்கத்தும், விசித்திரமான வேலைப்பாடுள்ள மண்டபங்களும் கோபுரங்களும் சிற்பமுறையிற் பொற்புற அமைந்து அற்புதமான காட்சியையளிக்கும். நானா தேசங்களினின்றும் இறக்குமதியான பல பண்டங்களாலும் குறைவற நிறைந்துள்ள கடைவீதிகளின் வளத்தைக் கணித்தறியவியலாது.

மாடங்களிலும் மாளிகைகளிலுமுள்ள மேனிலைகள்தோறும் மைந்தரும் மகளிரும் அன்புடனமர்ந்து சிருங்காரமாகக் காலங்கழிப்பார்கள். அரம்பையையொத்த அழகிய மாதர்களுடைய ஆடலும் பாடலும் ஆடவர்களுக்கு அகமகிழ்ச்சி செய்யும். குழலும், யாழும், குடமுழாவும் முதலான இசைக்கருவிகளோடு பொருந்தி எழுகின்ற மங்கலகீதங்கள் அவ்வூரில் எங்கணும் முழங்கும்.

கமுகு, வாழை, தென்னை முதலான வ்ருக்ஷங்களடர்ந்த தோப்பும், துரவும் நகரத்தைச்சூழ நாற்புறமும் அமைந்துள்ளன. தாமரை, கல்ஹாரம், நீலோத்பலம் ஆதிய நீர்ப்பூக்கள் மலர்ந்து வாஸனை வீசுகின்ற வாவிகளிலும், கூபங்களிலும், கேணிகளிலும், அன்னம், மயில், கபோதம், பூவை முதலான புள்ளினங்கள் துள்ளிவிளையாடும்.

வேதவேதாங்கங்களைக் கரைகண்டவர்களாய அந்தணர் மனைதோறும் அருமறை ஒலிக்கும். நியாயம், தர்க்கம், வேதாந்தம், மீமாம்சை முதலான சாஸ்திரங்களில் நிபுணர்களாகிய அவர்கள் வாக்யார்த்த விசாரம்செய்து சந்தோஷிப்பார்கள். அவர்கள் மகரகுண்டலமும், கேயூரமும், மணிக்கடகமும், பொற்பவித்திரமும் முதலான திவ்யாபரண பூஷிதர்களாய் விளங்குவார்கள்; க்ருஹஸ்தாச்ரமத்தில் நின்று, நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டு, ஔபாசனம் அக்னிஹோத்ரம் முதலான கர்மாக்களைச் சரிவர அனுஷ்டிப்பார்கள்; வாஜபேயம், அசுவமேதம், பௌண்டரீகம் முதலான யாகங்களையும் செய்வார்கள். இன்னும் அவர்கள், தயை சாந்தம் முதலான நற்குணங்களுக்கு உறைவிடமாய் தானம் முதலாயின செய்வதில் தமக்கு நிகரில்லாத தார்மிகர்களாய் எல்லாராலும் புகழ்ந்து போற்றப்படுகிறார்கள். அங்குள்ள அரசர்களனைவரும் வில்தொழிலும் மல்தொழிலும் நன்கு பயின்றவர்கள். அவர்கள் வீரம்மிகுந்த வெற்றியாளர்களாகையால் தங்கள் நகரத்திற்கு வேற்றரசரால் விளையும் தீமை சிறிதுமின்றிப் பாதுகாக்கும் ஆற்றலுடையவர்கள்.

இவ்வாறு ஒவ்வொரு வருணத்தாரும் தத்தமக்குரிய தொழில்களைச் செவ்வனே இயற்றிச் சீரும் சிறப்புமெய்தி வாழ்ந்துவருகிற அந்த மதுரைமா நகரத்தின் வளங்களையெல்லாம் கண்ணாரக் கண்டு களித்த அம்பரீஷனென்னும் அவ் வரசர்பெருமான் பெரிதும் வியப்புற்றவனானான். அப்பால் அவன் அந்த நகரியை உத்தரமதுரைக்குச் சமானமான உயர்வுடையதென்று பாராட்டி மற்றும் சிறிது தூரம் சென்றான். அவ்வளவில் அங்குள்ள அஷ்டாங்கவிமானம் அவன் கண்ணுக்குத் தோன்றிற்று.

அந்தவிமானம் மிகவும் உத்க்ருஷ்டமான த்ரவ்யங்களாலாகிய திருப்பணிகளையுடையது; ஸ்ரீவைகுண்டமே பூலோகத்தில் வந்து தங்கினதுபோலச் சிறந்து விளங்குமாறு தெய்வத்தச்சனால் இயற்றப்பட்டது. குமுதன் முதலான சாரதர்களும், சண்டன் முதலான் துவாரபாலகர்களும், சேனைநாயகர் முதலான பாகவதோத்தமர்களும் அதன் பாதுகாவலில் அமர்ந்துள்ளனர். அவ்விமானத்தைச் சுற்றிலும் ப்ராகாரங்களும் வாசல்களும் வகுக்கப்பட்டுள்ளன. அவ்வாசல்கள்தோறும் ப்ரஹ்மேந்திராதி தேவர்களும், அஷ்டதிக்பாலர்களும் நித்யசூரிகளும் முதலாயினோர் எப்பொழுதும் குழுமி நிறைந்திருப்பதையும் அவ்வரசன் கண்டான்.

அவைகளையெல்லாம் பார்த்தானபிறகு, அம்பரீஷன் அந்தவிமானத்தினுள்ளே எழுந்தருளியிருக்கிற எம்பெருமானைஸேவித்து இன்பவெள்ளத்தில் மூழ்கினன். தன்னுடைய வடிவழகினால் யாவரையும் ஈடுபடுத்தும் அந்த சுந்தரராஜன் ஸ்ரீபூமிநீளாஸமேதனாயிருந்து அரசனுக்கு அநுக்ரஹம் புரிந்தான.

அவ்வாறு அருள்சுரந்த மாயவனை அரசன் மனமார வாழ்த்தி, அவனுடைய திருவடிகளில் தெண்டன் ஸமர்ப்பித்தான். அவனுடைய திவ்ய சௌந்தர்யத்தைக் கண்டு திகைத்துப் புளகாங்கிதங் கொண்டு, அவ்வழகைப் பருகுவான்போன்று தன்கண்களால் நோக்கியவண்ணமாக நெடுநேரம் நின்றான். புருஷசூக்தத்தினால் அவனைப் புகழ்ந்து, பக்திபரஸ்ஸரமாகப் பலதடவை ப்ரதக்ஷிணஞ் செய்தான். ஆடிப்பாடி அவனை அலற்றிப் பலவகையான அவஸ்தைகளையடைந்தான். மீண்டும் அவன் ஒருவாறு சித்தந்தெளிந்து பெருமானை நோக்கிப் பின்வருமாறு சொல்லித் துதித்தான்.—

தோற்றியொடுங்குமுடற்றுன்பப்பெருநோயை
மாற்றவலியின்றிமனந்தான்மிகவெருவிச்
சாற்றரியநின்னைச்சரண்புகலாய்வந்தடைந்தேன்
ஆற்றமெலிந்தேன்அலந்தேன்அருட்கடலே.

பொன்னிறையுந்தாமரைமென்போதனையஇன்னடியை
உன்னியதோர்மாத்திரையேகூற்றினையும்ஒட்டிவிட்டேன்
என்இறையேஎன்றுமுனைத்திவழிபட்டிடநின்
சன்னிதியில்வைகுமதவமெனக்குநல்காயே.

ஐயாவழிவழிநின்அம்பொன்அடித்தொண்டர்களாய்
மெய்யானமுத்தர்களாய் நித்தராய்வீட்டினிற்
பொய்யாதசெல்வமுற்றபுண்ணியரிற்சேர்ப்பதெந்நாள்
எய்யாதயானுமுனக்கேவல்செய்வதெந்நாளோ.

'என்னுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்ட உத்தமபுருஷரே! ஸ்ரீதேவிக்கு வல்லபரான ஓ ஸ்வாமியே! களைகணற்றார்க்கு உதவி புரியும் கருணைக்கடலாயுள்ளவரே! தோற்றமும் ஒடுக்கமும் உடைய இந்த உடற்பொறையின் வேதனையால் நான் மிகவும் இளைத்துவருந்துகின்றேன். அதனால் தேவரீருடைய திருவடிப்போதுகளைத் தஞ்சமாகப்பற்றிய யான் காலனார் துயரைக் கடிந்தவனானேன். ஆகையால் அடியேன் எக்காலத்தும் தேவரீருடைய ஸந்நிதியில் வைகும் தவமுடையனாகுமாறு க்ருபைபுரியவேண்டும். அன்றியும் வழிவழியாக